# நம்பிக்கை ஒளி

RAY OF HOPE

இதழ்-26

November - 2017


துவண்டோர் துயர் துடைத்து ஒளி யேற்றுவோம்


G05, Courtenay House, 10 Courttenay Road, East Lane, Bussiness Park, Middlesex, Wembley, HA97ND,UK

facebook.com/theroh.org w ww.theroh.org Email: roh@theroh.org Tel: (0044)2086179343 Mobile: 07853071088






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை மாணவர்களுக்கு சத்துணவு அளிப்போம்



உயிர்கள் வாழ்வதற்கு உணவு அத்தியாவசியமானது. ஊட்டச்சத்து மிக்க உணவுகள் ஒவ்வொருவரின் ஆரோக்கியமான வாழ்வுக்கும் உற்சாகமான செயற்பாட்டுக்கும் உறுதுணையானதாகும். பாடசாலைச் சிறுவர்களின் வளர்ச்சிக்கும் அவர்களின் சுறுசுறுப்பான இயக்கத்துக்கும் சத்துணவே தலையானதாகும்.

சிறுவர்களின் வளர்ச்சிப் படிகளில் அவர்களின் கற்றல் மேம்பாட்டுக்கு உத வும் வகையில் ஊட்டச்சத்து மிகுந்த உணவுகளை உண்பதற்கு வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தல் பெற்றோர், பெரியோர் யாவரினதும் பாரிய பொறுப்பாகும்.

பாடசாலைக்குச் செல்லும் சிறுவர்கள் தமது உணவை அவற்றின் தரம் அறிந்து உண்ணும் வகையில் தம்மைப் பழக்கப்படுத்திக் கொள்ளும் ஆற்றல் இல்லாதவர்களாகவே வளர்கிறார்கள். பசி தோன்றும்போது வயிற்றை நிரப்புவதற்காகவும், நல்ல மணம், சுவை மிக்க உணவுகளை விரும்பி உண்ணவும் முந்துகிறார்கள். ஊட்டச்சத்து மிகுந்ததும், எமது சூழலில் இலகுவாகப் பெறக் கூடியதுமான உணவுகளை உண்ணும் பழக்கத்தை அவர்களிடத்தில் ஏற்படுத்துவதற்கும் நாம் முயல்வதில்லை.

காலையிலே பெற்றோரிடத்தில் காணப்படும் வேலைக்குச் செல்ல வேண்டும் என்ற விரைவும், வேகமும் அதிகரித்திருக்கின்ற காரணத்தினால் இலகுவாகப் பெறக்கூடிய ஊட்டச்சத்துக் குன்றைந்த பாண், பணிஸ், நூடில்ஸ் போன்ற உணவுகளைக் கடைகளில் வாங்கி உண்பதுடன் தமது பிள்ளைகளுக்கும் அதனையே உணவாக வழங்குகின்றனர்.

இவர்களிற் பலர் காலை உணவை உட்கொள்ளாமலேயே வேலைக்கும், பாடசாலைக்கும் செல்கின்றனர். வறுமையும் பல்வேறு வசதியீனங்களும் இவர்களுக்கான ஆரோக்கிய வாழ்வைத் தரும் ஊட்டச்சத்துள்ள உணவுகளைப் பெறும் சந்தர்ப்பங்களைத் தொலைத்து விடுகின்றன.

எனினும், தொழிலுக்குச் செல்லும் பெரியவர்களைப் பார்க்கிலும், பள்ளிச் சிறுவர்கள் விடயத்தில் ஊட்டச்சத்துள்ள உணவுகளை அருந்தாது செல்லும் இந் நிலை, அவர்களது வளர்ச்சிப்படிகளில் அதிக பாதிப்புக்களை ஏற்படுத்தும் என்பதை நாம் அறிவதில்லை.

சிறுவர்கள் உடல் வளர்ச்சியிலும் உள்ளத் தெளிவிற்கான சிந்தனையிலும் புதுமையை, வேகத்தை, விவேகத்தைக் காணவேண்டுமாயின் உடல் விருத்திக்கும், மூளையின் சுறுசுறுப்புக்கும் துணை செய்யவல்ல ஊட்டச்சத்து மிக்க உணவுகளை சிறு பராயத்திலிருந்தே பழக்கப்படுத்திக்கொள்ள வழிகாட்டல்களும், ஒத்துழைப்பும் அவசியமாகும்.

பாடசாலை செல்லும் சிறுவர்கள் எவ்வகை உணவையும் உண்ணாமற் செல்வதனால் அல்லது ஊட்டச்சத்துள்ள உணவுகளை உட்கொள்ளாமற் செல்லும் நிலையினால் ஒவ்வொரு சிறுவர் சிறுமியரும் சோம்பல், அசதி, ஞாபக மறதி என்பவற்றோடு கோபம், மயக் கம், களைப்பு போன்ற குணவியல்புகளும் தோன்றிக் காணப்படுவதை அவதானிக்கலாம். காலை 7.30 மணிக்கு ஆரம்பமாகி பிற்பகல் 1.30 மணி வரை யிலான காலப் பகுதியில் பாடசாலை களுக்குச் சென்று தமது கற்றலில் செலவிடும் சிறுவர்கள் எவ்வகை உணவும் உண்ணாமலே, ஊட்டச்சத்தற்ற உணவை உண்டு அந்த நேரத்தைப் பயனுள்ளதாகப் பேணுதல் கடினமானதாகும். எனவே, பாடசாலைகளில் சத்துள்ள உணவை வழங்குவது அவசியமாகிறது.

நோய்கள் தொடராத ஆரோக்கியமான வாழ்க்கைக்கும், ஞாபகசக்தி, சிந்தனைத் தெளிவு என்பவற்றை ஊக்குவிப்பதற்கும், மூளை விருத்திக்கும் விளையாட்டுக்கள், வேலைகள் போன்ற பயிற்சிகளால் விளையும் உடலுறுதிக்கும் சத்துணவு அவசியமாகும்.

சிறுவர்களின் உணவு விடயத்தில் பெற்றோர்களுடன் பாடசாலைச் சமூகமும் இணைந்து செயற்பட்டு, சிறுவர்களின் வளர்ச்சிக்கேற்ற ஊட்டச்சத்துமிக்க உணவுகளை வழங்குவதற்கு ஊக்கம் அளிப்பது அவசியமாகும். எமது பாடசாலைச் சிறுவர்களுக்கு ஊட்டச்சத்து மிகுந்த உணவுகளை வழங்கி அவர்களின் அறிவுத்திறன் மனப்பாங்குகளை வளர்ப்போம்.

எதிர்காலம் வளமிக்கதாகவும் வலமை மிகுந்ததாகவும் அமைய பாடசாலைளில் கற்றலில் ஈடுபடும் சிறுவர்களுக்கு சத்துணவை வழங்குவோம்.

எம் சிறார்கள் வலிமைமிகு திறன் விருத்தியுடன் திகழக் கைகொடுப்போம்.

**நீ எப்போது யாருமற்ற ஏழை, எளியவர்களுக்கு உதவுகிறாயோ, அப்போது ஆண்டவன் உன்னிடம் 'கடன்காரன்' ஆகிறான்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பிக்கை ஒளி

துவண்டோர் துயர் துடைத்து ஒளியேற்றுவோம்

November RAY OF HOPE இதழ் - 26

## யாருடைய வியாபாரத் திட்டங்கள்?

இங்கிலாந்தில் வாழ்ந்து வரும் ஓர் ஈழத்தமிழன் தொலைபேசியில் உரையாடிய போது இங்குள்ள நிலைமைகளைப் பற்றி இவ்வாறு கூறினார். "என்னுடைய பல நண்பர்கள் உங்க கஸ்டப்படுகிறார்கள் என்று காலை, மதியம், இரவு என வருத் தத்திற்கு குளிசை போடுவது போல நேரம் தவறாமல் தொலைபேசியில் தொடர்பு எடுப்பார் கள். தமக்குச் சும்மா காசு தர வேண்டாம், தாங்கள் தொடங்கவிருக்கும் தொழில் முயற்சிக்கு பணம் தந்தால் அதை வைத்தே முன்னேறிக் காட்டுறம் என்று உறுதி மொழியும் தந்தார்கள். 'பாவங்கள்' என்று என்ர மனம் சொல்லிச்சு. அவர்கள் கேட்ட தொகையை எனது நண்பர்கள் பலரிடமும் பல்லுக்காட்டி, சேர்த்தெடுத்து அனுப்பி னன். ஒருவன் தச்சுவேலை செய்யப்போறன் 02 இலட்சம் தந்தால் முன்னேறிக் காட்டுறன் பார் என்றான். அவன் கேட்ட 02 இலட்சத்தையும் அனுப்பினன்.

" 'அண்ணை! நீங்கள் தான் கடவுள்' என்று அழுதான். ஒரு கிழமை-க்குப் பின் அவன் எனக்குத் தொடர்பு எடுக்காததால் அவனுக்கு நான் தொடர்பை ஏற் படுத்தினேன். 'நீங்கள் அழைத்த இலக்கம் பாவனையில் இல்லை' என தொலை பேசி நிறுவனம் சொல்லியது. இப்படிக் கன சனம் உதவி எனக் கேட்பினம். உதவி கிடைத்ததும் அவர்களுடன் இருந்த ஒரே தொப்புள்கொடியான சிம்காட்டை கழற்றி எறிந்து விடுகிறார்கள்" என்றார்.

இது ஓர் உண்மைக்கதை. இது போன்ற பல வெளிநாட்டவர்களின் வேதனைகள் உண்டு. இது விடயத்தில் எங்கு பிழை நடக்கிறது? இந்த நிலைக் குக் காரணம் வடகிழக்கில் உள்ளவர்களின் வியாபாரத் திட்டத்திற்கு வெளி நாட்டவர் பணம் கொடுப்பதே.

வடகிழக்கில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட, தமது உறவுகளை இழந்த இலட்சக்கணக்கான மக்கள் உள்ளனர். அதேவேளை, அவர்களுக்கு உதவ வேண்டுமென தனிப்பட்ட முறையில் விரும்புகிற புலம்பெயர் தமிழர்களும் உள்ளனர்.

இந்த வாங்கிகளும், கொடுப்பிகளும் ஏன் சமரசம் செய்ய முடியாதுள்ளது. வெளிநாட்டில் இருப்பவர்கள் ஒவ்வொரு சோகக் கதையையும் கேட்டு 'பாவங்கள்' என்று முடிவெடுப்பதுதான் இதிலுள்ள கொடுமை.

வெளிநாட்டு உதவிகளைப் பெற விரும்புகின்ற பலர் 'அவையின்ர காசில நூறு ரூபா அனுப்பினால் இஞ்ச எவ்வளவு காசு வரும்? அவை ஒருக்கால் தந்தால் என்ன குறைஞ்சே போவினம்' என்ற மனநிலையில் உள்ளனர்.

டொலரை 'தொதல்' என்று சொல்லுகிற அளவுக்கு படிப்பு இல்லாத சனத் துக்கும் இலங்கை நேரப்படி அங்க இருட்டோ, பகலோ வேலைக்குப் போயி ருப்பினமோ, இல்லையோ சுவிஸ் காசு 100 ரூபா இஞ்ச எவ்வளவு தேறும், கனடா, இங்கிலாந்து, அமெரிக்கா, அவுஸ்திரேலியா என்ற நாடுகள் பற்றிய முழுமைப்படுத்தப் பட்ட அறிவு எல்லாப் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் இல்லை.

ஆனால், தொடர்ந்து வெளிநாட்டில் உள்ளவர்களிடம் காசு உருவும் 'நெப்பெண்டீஸ்' தாவரம் போன்ற கெட்டிக்காரர்கள் இங்கிருக்கும்போது, வெளி நாட்டில் உள்ளவர்கள் தங்களைக் கெட்டிக்காரர் என்று நினைப்பதுதான் பிழையானது.

வடகிழக்கு தமிழ் மக்களைப் பாவம் பார்த்து யாரும் உதவக்கூடாது. அவர்கள் கேட்கும் உதவி நியாயமானதா என்று தேடி, புத்திபூர்வமாக உதவ வேண்டும். வழங்கும் பணத்தை அன்பளிப்பாகவோ, இனாமாகவோ வழங்காது நீண்டகால வட்டியில்லாக் கடனாக வழங்கவேண்டும்.

இது விடயத்தில் உதவி வழங்குபவர், உதவி பெறுபவர் ஆகிய இருவரும் ஓர் ஆவணத்தில் ஒப்பமிடவேண்டும். குறிப்பிட்ட வாழ்வாதார நடவடிக்கையின் வியாபாரத் திட்டம் சாத்தியமானதா என முதலில் பரிசீலிக்க வேண்டும்.

ஒவ்வொரு மாதமும் கோடிக்கணக்கான ரூபாய்கள் வெளிநாடுகளி லிருந்து இலங்கை அரசுக்குத் தெரிந்தும் தெரியாமலும் வந்து சேருகின் றன. இதில் மிகக் குறைந்த வீதத்தினர் மட்டுமே முன்னேறியுள்ளனர்.

வெளிநாட்டு உதவிகளை ஒருதடவையில் பெரிய தொகைப் பணத்தை வழங்கக்கூடாது. மூன்று மாதம், ஆறு மாதம், ஒரு வருடம் என மதிப்பீடு செய்வது அவசியம். இந்த வரையறைகள் இல்லாது வழங்கப்படும் பணம் 'எண்ணெய்ச் செலவே ஒழிய பிள்ளை வளர்த்தி இல்லை' என்பதாக அமையும்.

அல்லது கவுண்டமணி செந்திலின் வாழைப்பழக் கதைபோல கொடுத்த காசுக்கு கணக்குக் கேட்டால் "அது தான் அண்ண இது" என்று சொல்லத் தயங்க மாட்டார்கள் நம்மவர்கள்.

பணம் கொடுப்பதால் மட்டும் ஒரு மனிதனை முன்னேற்றிவிட முடியாது. தொடர்ந்து பணம் வழங்குவதுகூட ஏற்கனவே அவர்கள் செய்து வருகின்ற தொழிலை மறந்துவிடவே வழிவகுக்கும். சாதாரணமாக ஒரு வீட்டுத்தோட்டம் வைத்திருக்கக்கூட மக்கள் விரும்பாத அளவிற்கு மிக இலேசாக பணம் கையில் கிடைப்பதால் பெருமளவு மக்கள் முயற்சியற்றோராக மாறி வருகின்றனர் என்பதை வெளிநாட்டில் உள்ளவர்கள் ஒருகணம் சிந்தித்து, புத்திபூர்வமாக உதவ வேண்டும் என்பதே நம்பிக்கை ஒளியின் நிலைப்பாடும்.

## நெற்றிப்பொட்டே...?

இனங்கூற முடியாத ஏதோ ஒன்று
நெற்றிப்பொட்டை
சதா தாக்கிக்கொண்டிருக்கிறது
அதிகாலை வாசல் கதவைத் திறந்தபோது
கண்ணெதிரே செய்தித்தாள்
அதைத் திறந்தபோது..
எதிரே சீரழிவின் நடுவே துள்ளி மறையும்
கோலங்கள் பல
நிழற் கோடுகளாக....

கலை என்பது கொலை
அச்சுக் காட்டில் முளைத்து நிற்கும்
அறிவின் அகங்காரத்தின்
சிகரத்தில்
மேடைகளில்
கதைகள் பல பேசிடும்
கனவான்கள்
மற்றொரு பக்கத்தில்...

துக்கத்திற்கு விடுமுறை இல்லை
பக்கத்திற்கும் குறைவுகள் இல்லை
இருப்பினும் அது சற்றுத் தூங்கினால்
நானும் சற்றுத் தூங்கமுடியும்
சதா ஒரே சத்தம்
செவிப்பறையைத் துளைக்கும்
இரைச்சல்கள்... சத்தங்கள்...
நடுவே அவசரத்தில் அந்த
இளைஞன் படுவேகத்தில்
பஸ்சுடன் மோதி
அதேயிடத்தில் அவலச்சாவு
இன்னொரு பத்தியில்....

அவலங்களின் கோலங்களை
அழகாக வடிவமைத்தேன்
அவைகளை ஒவ்வொன்றாக
ஒழுங்குபடுத்தி நடுநிசியில்
மீட்டுப்பார்த்தேன்..
மெல்லக் கண்விழித்தேன்
நாளை விடியும் போது
எத்தனை பத்திகள்
எத்தனை விதங்களில்...
அத்தனையும் விட்டு
அமைதியுடன் முகத்தைப் பார்த்தேன்
அந்த நெற்றிப்பொட்டைக்
காணவில்லை...

அன்பரசி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மீன்பிடிக்க உதவுங்கள்....



**க**ந்தசாமி. தயாபரன் ஆகிய நான் சந்தி வெளியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாக வும் கொண்டுள்ளேன். சந்திவெளி புதுப்பிள் ளையார் வித்தியாலயத்தில் தரம் 03 வரை கல்வி கற்றேன். எனது வாழ்க்கை அமை-தியான ஒரு வகையில் நகர்ந்து கொண டிருந்த காலப்பகுதியில் எனது கிராமமானது அடிக்கடி இராணுவத்தால் சுற்றிவளைப்புக்கு உள்ளாகும்.

அன்றைய அந்தச் சூழல் எனது படிப்பை முழுமைபெற விடவில்லை. அதேநேரம் எனது குடும்பக்கஷ்டநிலை காரணமாக எனது தந் தையுடன் கூலி வேலைக்கு சிறிய வயதிலே சென்று வருவதுண்டு.

இவ்வாறு வயல் வேலைக்குச் சென்று வரும் வேளை ஒரு நாள் எனது அப்பா பதுங்கி இருந்த இராணுவத்தினரால் கடுமை யாகத் தாக்கப்பட்டு பின்னா் கைது செய்யப்பட் டார். அவர்களின் முகாமிற்கு கொண்டு சென்று 3 மாதத்தின் பின் எனது அப்பா வீடு வந்தார். தான்பட்ட துன்பங்களை எம்மிடம் கூறியவேளை, அப்பா எவ்வளவு சொல் லொணா அட்டுழியங்களை அனுபவித்துள் ளார் என்பதை என்னால் உணர முடிந்தது. அதன் பின்னர் தான் 1990 ம் ஆண்டு நான் போராட்டப் பாதைக்கு உள்ளீர்க்கப்பட் டேன். அந்த காலப் பகுதியிலிருந்தே எனது ஒரு கால் இழக்கப்பட்டும், ஒரு கை செயலி ழந்தும் உள்ளது.

இறுதி யுத்தத்தின் பின்னர் புனர்வாழ்வு முகாமில் 2 வருடம் இருந்து தற்போது எனது மனைவி இரு பிள்ளைகளுடன் சேர்ந்து வாழ்ந்து வருகிறேன். இவ்வாறு வாழ்ந்து வரும் நிலையில் வாழ்வாதாரத்திற்கும் மற் றும் பிள்ளைகளின் கல்விச் செலவிற்கும் நாளாந்தம் மிகவும் கஸ்ரப்படுகின்றேன்.

**எனது பிள்ளைகளின் படி-ப்பு செலவினத்திற்கு "நம்பிக்கை ஒளி" நிறுவனத்தின் மூலமாக மாதாந்தம் 5000 ரூபா கொடுப் பனவு வழங்கப்படுகின்றது.**

இந்த உதவிகளைச் செய்ய முன் வந்த நம்பிக்கை ஒளி அமைப்பிற்கு என்றும் நன்றி யுள்ளவனாவேன். என் பிள்ளைகளின் கல்வி முயற்சிக்கு உதவ முன்வந்தது போல், எனது சொந்த முயற்சியில் நிலையான ஒரு தொழிலைச் செய்து வாழக்கூடிய சூழ்நிலை அமைந்தால் எனது நலனும் எனது பிள்ளைக-ளின் எதிர்காலமும் ஒளிமயமாகும்.

தற்போது எனது நண்பனுடன் ஆற்று மீன்பிடித் தொழிலுக்குக் கூலி ஆளாகச் சென்று, அதில் நாள் ஒன்றுக்கு கிடைக்கும் 600 ரூபாவினை வைத்துக் கொண்டு, அன்றாட அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்று-தற்கு மிகவும் அல்லற்படுகிறேன். சிலவேளை மீன் பிடிபடாவிட்டால் அந்தச் சிறு தொகை யும் கிடைக்காமல் போகலாம். இவ்வாறு நான் மிகவும் வாழ்வாதாரத்திற்கு கஸ்ரப்படுகின் றேன். எனது எதிர்காலம் மிகவும் ஒளிமயமாக அமைய எதிர்பார்ப்போடும் இருக்கின்றேன்.

தற்போது செய்து கொண்டு இருக்கும் மீ-ன்பிடித் தொழிலை மேம்படுத்துச் செல்வதற்குச் சொந்தமாக தோணி, வலை இருக்குமானால் நான் சொந்தமாகத் தொழில் செய்து, குடும்ப பொருளாதாரத்தை மேம்படுத்தி, யாரிடமும் கையேந்தாமல் வாழமுடியும்.

அதேநேரம், எனது ஊர்க் கிராம மீனவர் களிடம் இருந்தும் மீன்களை கொள்வனவு செய்து அவற்றை விற்று வாழ்வாதாரத்தை மேம் படுத்த முடியும். இவ்வாறு இந்தத் தொழிலை ச் செய்வதற்கு அதிக செலவினமாகும் என என்னால் கணிக்க கூடியதாக உள்ளது. இதற்கு உதவிட நம்பிக்கை ஒளியூடாக உதவியை நாடி நிற்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நம்பிக்கை ஒளி நிறுவனம் ஊடாக பயன்பெறும் பாடசாலை மாணவர்கள்

**பொருளாதர ரீதியில் பின்தங்கிய மாணவர்களின் நலனைக் கருத்திற் கொண்டு அவர்களுக்கு நம்பிக்கை ஒளி நிறுவனம் தன்னாலான உதவி களைச் செய்து வருகின்றது. இதன் அடிப்படையில் இந்நிறுவனத்தினர் நேரடியாக விஜயம் செய்து அவர்களின் உண்மை நிலையைக் கருத்திற் கொண்டு உதவிகளை வழங்கி வருகின்றனர்.**

முல்லை மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு பாட்டியின் நிலை கவனத்தில் எடுக்கப்பட்டது. இவரது மகள் திருமணம் முடித்து இரு குழந்தை களுக்குத் தாயாகியிருந்தார். மருமகன் களமுனையில் படுகாயமடைந்தார். வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வந்த இவர் பின்னர் உயிரிழந்தார்.

இதன் பின்னர் ஓரிடத்தில் பணியாற்றி வந்த இவரின் மனைவி (பாட்டியின் மகள்) அங்கு அறிமுகமான ஒருவரை மறுமணம் செய்ய உத்தேசித்தார். எனினும், இவரது இரு குழந்தைகளையும் பொறுப்பெடுக்க புதிய மணமகன் விரும்பவில்லை. இதனால் குழந்தை களைக் கைவிட்டுப் புதிய வாழ்க்கையை அமைத்துக் கொண்டார். யாருக்கும் தெரியாத ஓரிடத்தில் இவர்களது புதிய இல்வாழ்வு ஆரம்பமாயிற்று. குழந்தைகளை வளர்க்கும் சுமை பாட்டியின் தலையில் வீழ்ந்தது. யுத்தம் முடிந்து எல்லோரும் முகாம் வாசிகளான போதே தனது மகள் உயிரோடு இருப்பதையும் சீரும் சிறப்புமாக தனது மகள் வாழவில்லை எனவும் உணர்ந்து கொண்டார்.

தனது மகளால் மீண்டும் தாயாக மட்டுமே முடிந்தது என்பதையும், குற்ற உணர்வால் தவிப்பதையும் புரிந்து கொண்டார். ஆனாலும் பேரக்குழந்தைகளை வளர்க்க சிரமப் படுகிறார்.

பிள்ளைகளின் கல்விச் செலவுக்கு நம்பிக்கை ஒளி நிறுவனம் மாதாந்தம் ரூபா ஆயிரத்து ஐநூறு (1500/=) கொடுத்து வருகிறது. இவர்களின் நிலையைக் கருத் திற்கொண்டு அவர்களின் வீட்டுக்கான மின் இணைப்பை செய்து, பிள்ளைகள் மின்னொளியில் கல்வி கற்பதற்கான வசதியையும் செய்து கொடுத்துள்ளது.

அரசின் வாழ்வாதாரத் திட்டத்தில் இணைந்து கொள்ள பாட்டியால் முடியவில்லை. இவரின் பங்களிப் பாக ரூபா 17 ஆயிரம் வரையில் கட்டவேண்டியுள்ளது. பாட்டியின் சுமையைக் குறைக்க பேரன் பனம் விதைகளைப் பொறுக்கி பாத்தி அமைக்க முயன்று வரு கின்றார். இவ்வாறான உடல் உழைப்பை மட்டுமே வழங்க மாணவனான அவனால் முடியும்.

பசுமாடு மற்றும் ஆடு இருந்தால் பாட்டி அதை வைத்து வாழ்க்கையை ஓட்டிவிடுவார். கல்வி மூலம் சொந்தக் காலில் பேரக்குழந்தை கள் நிற்கும் நிலை வரும் வரை பாட்டியின் உழைப்பு தொடர்ந்து கொண்டேயிருக்கும். கோழி வளர்ப்பு, பசுமாடும் தற்போது கிடைத்தால் பிள்ளைகளின் எதிர்காலம் சிறக்கும்.

பொருளாதார ரீதியில் பின்தங்கிய மாணவர்களின் நலனைக் கருத்திற்கொண்டு அவர்களுக்கு "நம்பிக்கை ஒளி" நிறுவனம் ஊக்குவிப்புத் தொகையாக மாதாந்தம் 1500 ரூபா வழங்கி வருகிறது. இத் தொகையினைப் பெற்றுவரும் பயனாளிகள் சிலரின் விபரம் வருமாறு :

### விக்னேஸ்வரன் ஜதுசன்

முகவரி :- இல 07, கிறிஸ்தோகுளம்

பாடசாலை: கிறிஸ்தோகுளம் அ.த.க. பாடசாலை

தரம் :- 05

இவரது தந்தை திருநாவுக்கரசு விக்னேஸ்வரன் கடத்தப்பட்டு காணாமற் போயுள்ளார். தாயார் ஜீவராணி கூலி வேலை செய்து வருகின்றார். கிலுசன் ஒரு தொழுநோயாளி. தற்போது இவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

### தங்கராஜா தயாளன்

முகவரி :- கிறிஸ்தோகுளம்

பாடசாலை:-கிறிஸ்தோகுளம் அ.த.க. பாடசாலை

தரம் :- 05

இவருக்கு தொய்வு உட்பட மூன்று பாரிய நோய்கள் ஏற்பட்டுள்ளது. இதனால் அடிக்கடி வைத்தியசாலைக்குத் கொண்டு செல்லப்படவேண்டியவராகக் காணப்படுகின்றார். இவரது தாய் தந்தை எனக் குறிப்பிட எவருமில்லை. இவரை இராசையா இந்திரன் என்பவர் தன்னுடைய பிள்ளையாக வளர்த்து வருகிறார்.

### ஞானசுதன் பதுஜனா

முகவரி :- விளாத்திக்குளம், வித்தியாபுரம், ஒட்டுசுட்டான்.

பாடசாலை:- ஒட்டுசுட்டான் ம.வி.

தரம் :- ஆண்டு 07

மும்மொழிகளிலும் சிறப்பான புள்ளிகளைப் பெற்று வருகின்றார். ஆறுமுகம் வித்தியாலயத்தில் கற்கும்போது 2015 நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்துள்ளார். இவரது தாயார் - சகோதரன் டினுசன் பிறந்து 41 ஆவது நாள் எறிகணைத் தாக்குதலில் உயிரிழந்துள்ளார். இவரது தந்தை மறுமணம் செய்துள்ளார். இவர்கள் இருவரும் பேத்தியின் பராமரிப்பில் வாழ்கின்றனர்.

### வசந்தகுமார் கேஜந்தினி

முகவரி :- விநாயகர் வீதி வித்தியாபுரம், ஒட்டுசுட்டான்.

பாடசாலை :- ஆறுமுகம் வித்தியாலயம்

தரம் :- ஆண்டு 05

27.03.2017 நடைபெற்ற எறிகணைத் தாக்குதலில் இவரது தந்தை இராசதுரை வசந்தகுமார், தாய் நந்தினி இருவரும் கொல்லப்பட்டனர். அம்மம்மாவின் பராமரிப்பில் வாழ்ந்து வருகின்றார்.

### வடிவேல் பிரியங்கா

முகவரி :- அரை ஏக்கர், வித்தியாபுரம், ஒட்டுசுட்டான்.

பாடசாலை :- ஒட்டுசுட்டான் ம.வி

தரம் :- ஆண்டு 8

2014 ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து நன்றாகக் கல்வி கற்று வருகின்றார். இவரது தந்தை சுப்பிரமணியம் வல்வைக் கடலில் காணாமற் போயுள்ளார். தாயார் மகேஸ்வரி கூலி வேலை செய்து வருவதுடன் விவசாயமும் செய்து வருகின்றனர்.

### சுவேந்திரன் சுவேக்கா

**முகவரி :-** ஆதிபராசக்தி வீதி, ஒட்டுசுட்டான்

**பாடசாலை:-** ஒட்டுசுட்டான் ம.வி

இவரது தந்தை நவம்பர் 27. 2008 கொழும்பில் வைத்து வெள்ளைவானில் கடத்தப்பட்டுக் காணாமற் போயுள்ளார். தாயார் 07.04.2009 இறுதி யுத்தத்தின் போது எறிகணைத் தாக்குதலில் உயிரிழந்துள்ளார். இவர் பேரனின் பராமரிப்பில் வாழ்ந்து வருகின்றார்.

தொடரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**இவரது வாழ்வாதாரத்தை உயர்த்து முகமாக கிணற்றை ஆழமாக்கி மாட்டுக் கொட்டகை ஒன்றை அமைத்து, மாடு ஒன்றையும், கோழிகளையும் வாங்கிக் கொடுத்தால் இவர்கள் வாழ்வின் சுமைகளில் நம்பிக்கை ஒளி பங்கெடுத்து உதவலாம்.**



# மற்றவர் வாழ்வின் சுமைகளில் சுமைதாங்கிகளாக...



**35** வருட கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட ஒருவரைத் திருமணம் செய்து கொண்டுள்ளார் ஒரு இளம் பெண்.

இத்திருமணம் கொழும்பு மகசீன் சிறைச்சாலையில் நடைபெற்றது. திருமணப் பதிவு நடைபெற்றதும் மணமகன் தான் தங்கயிருந்த GH வாட்டுக்குத் திரும்பி விட்டார். இனி வருடா வருடம் கைதிகள் தினத்தன்று மட்டுமே அரு கருகே இருந்து தம்பதியர் பேச முடியும். அன்று மட்டுமே தனது கையால் சமைக் கும் உணவைக் கணவன் ருசிப்பதை மனைவியால் காணமுடியும். அந்தச் சில மணிநேரச் சந்திப்புக்காக இனி ஒரு வருடம் வரை காத்திருக்க வேண்டும்.

இல்வாழ்வு பற்றிய எதிர்பார்ப்பு, ஏக்கங்களைச் சவாலாக ஏற்றுக்கொண்ட இப் பெண்மணி சுகாதாரத் தொண்டராக வவுனியா வைத்தியசாலையில் கடமையாற்றி வருகிறார். நாளாந்தம் சுமார் நூறு ரூபா வரை போக்குவரத்துக்காகச் செலவு செய்தே இப்பணியை மேற் கொள்கிறார். தமக்கு நிரந்தர நியமனம் வழங்க வேண்டுமெனப் போராடி வருபவர்களில் இவரும் ஒருவர். அண்மையில் மாகாணசபை உட்பட பல்வேறு தரப்பினரிடம் வேண்டுகோள் விடுத்தும் இவர் போன்றோரின் அவலம் கண்டுகொள்ளப்படவில்லை.

இதேவேளை, வவுனியாவை ஆட்டிப் படைக்கும் சிறுநீரக நோய் இவரது தந்தை பியசேனவையும் விட்டு வைக்கவில்லை. எனவே, தந்தையைக் கவனிக்கும் பொறுப்பும் இவருக்குண்டு. அத்துடன், குடும்பத்தின் பொருளாதாரச் சுமையும் இவரின் பொறுப்பிலுண்டு. கடும் வரட்சியால் கிணறும் வற்றி விட்டது. சிறு பயிர்ச்செய்கையும் பண்ண முடியாது. இருக்கும் ஒரு பசுமாட்டைத் தவிர வேறு வாழ்வாதாரம் இல்லை. இன்னொரு பசுமாட்டை, உதவி வழங்கும் நிறுவனம் ஒன்றிடமிருந்து எதிர்பார்க்கின்றார். நாம் கை கொடுத்து உதவலாமே.

இவரது கணவரின் நிலையையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும். சக்திவேல் இலங்கேஸ்வரன் எனப்படும் இவர் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட்டவர். நீதிமன்றில் அரச கருமமொழியில் சமர்ப்பிக்கப்பட்ட ஒப்புதல் வாக்கு மூலத்தின் அடிப்படையில் 35 வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

இவருக்கு அரச கருமமொழி தெரியாது. சில வாக்குறுதிகளை நம்பிக்கையின் அடிப்படையில் எல்லாவற்றுக்கும் தலையாட்டினார். முடிவு விபரீதமாயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைதூக்கிவிட என்று சொல்ல யாராவது ஒரு உறவு முன்வருமா?

பல்கலைக்கழக மாணவியொருவர் பெரும் சிரமத்தை எதிர்நோக்கி வருகிறார். இவரது தந்தை எறிகணைத் தாக்குதலில் பலத்த காயமடைந்தார். பொக்கணையிலிருந்து குருநாகலுக்கு மேலதிக சிகிச்சைக்காகக் கொண்டு செல்லப்பட்ட அவர், அங்கேயே உயிரிழுந்தார். இவரது வீட்டையும் படையினர் பயன்படுத்தி வந்தனர்.

மீள்குடியமர்வின்போது வீடு மீண்டும் இவர்களுக்குக் கிடைத்தது. இந்து நாகரிகம் A, தமிழ் B, புவியியல் B எனக் கிடைத்த உயர்தர வகுப்புத் தேர்வு முடிவு இவருக்குப் பல்கலைக்கழகம் செல்ல வழிவகுத்தது.

தற்போது படிப்பதுடன் கூலி வேலைக்கும் சென்று வருகின்றார். இவரது தம்பி காடாகிக் கிடந்த ஒரு ஏக்கர் காணியை தன் உடலுழைப்பால் திருத்தியுள்ளார். கச்சான் போட உத்தேசித்துள்ள இவருக்குப் போதிய நிதி வசதி இல்லை. இவர்கள் நிறுவனம் ஒன்றிடம் உதவிகோரி தமது தகவலை கொடுத்துள்ளனர். அது வெளிநாட்டில் வாழும் இவரது உறவினர்களுக்கும், ஊரவர்களுக்கும் கௌரவப் பிரச்சினையாகி விட்டது.

தமது இன்னல்களையும், அவலங்களையுமே சொல்லி தமது கஸ்டத்தை இவர்கள் வெளிப்படுத்தியதற்கு அதிருப்தி வெளியிட்டனர். பொது வைபவமொன்றில் இந்த அதிருப்தி குறித்த தகவல் வெளியிடப்பட்டது. அதில் கலந்து கொண்ட மாணவி கவலையுடனும், கண்ணீருடனும் வீடு திரும்பினார். அதிருப்தி வெளியிட்டவர்கள் உதவி செய்ய மனம் கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்க விடயம்.

தற்போது நம்பிக்கை ஒளி நிறுவனம் இவரின் கல்விக்கு மாதாந்தம் உதவி வருகின்றது. எனினும், குடும்பத்தின் வாழ்வாதாரத்தை உயர்த்த உதவி தேவைப்படுகிறது. நாங்கள் இருக்கிறோம். கை தூக்கி விட என்று சொல்ல யாராவது ஒரு உறவு முன்வருமா?

கு.மிதுனா,
வவுனியா.
17.10.2017.

நம்பிக்கை ஒளி,
லண்டன் நிறுவனம்.

கனம் ஐயா!

மிதுனா குணசேகரம் ஆகிய நான் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் மூன்றாம் வருட மாணவியாக கல்வி கற்றுக் கொண்டிருக்கின்றேன்.

நான் 2016 தை மாதத்திலிருந்து, இன்றுவரை தங்களால் 5000/= அடிப்படையில் வழங்கப்படும் பணத்தைப் பெற்றுக்கொண்டிருக்கிறேன்.

இந்த வருடப் படிப்பின் செலவுகள் அதிக மாக இருக்கின்றமையால் இந்தப் பணமானது போதுமானதாக இருக்கின்றது என்று கூற முடியாது, ஆனால் சமாளித்துக் கொள்ளகூடிய வகையில் இருக்கின்றது. காரணம் குடும்பத்தில் அப்பா ஒருவரே வேலை செய் கின்றார்.

எனக்கு இரண்டு தங்கைகள் இருக்கிறார்கள். ஒருவர். தென் கிழக்கு பல்கலைக்கழகத்தில் இரண் டாம் வருடத்தில் படித்துக் கொண்டிருக்கின்றார்.

ஆனாலும், இந்த உதவியானது என்னுடைய படிப்பிற்கு மிகப் பெரும் உதவியாக இருக்கின்றது. இதைப் பெற்றுத்தந்தவருக்கும், அதனைத் தொடர்ந்து நிறைவேற்றுகின்ற நம்பிக்கை ஒளி லண்டன் நிறுவனத்திற்கும் என் குடும்பம் சார்பில் மனதார நன்றியைத் தெரிவித்து கொள்கின்றேன்.

இங்ஙனம்,
மிதுனா....





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மு/வலையன்மடம் அ.த.க.பாடசாலை,
முள்ளிவாய்க்கால்,
முல்லைத்தீவு.
16.09.2017

இணைப்பாளர்,
லண்டன் நம்பிக்கை ஒளி,
கிளிநொச்சி

**சத்துணவுத்திட்டம் தொடர்பான அறிக்கை**

மு/வலையன்மடம் அ.த.க.பாடசாலை முல்லைத்தீவு, கரைதுறைப்பற்றுக் கோட்டத்தின் கீழ் இயங்கி வருகின்றது. போர் நடைபெற்ற காலத்தில் இப்பாடசாலை முற்றாக அழிவடைந்துள்ளது. மீள்குடியேற்றத்தின் பின்னர் இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் மிகக்குறைந்த மாணவர் எண்ணிக்கையும், பௌதிகவள வசதிகள் இன்றியும் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் நடைபெற்றன. கடந்த 2016 மே மாதத்திலிருந்து லண்டன் நம்பிக்கை ஒளி அமைப்பின் உதவியுடன் சத்துணவுத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு இன்றுவரை நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது.

மு/வலையன்மடம் அ.த.க. பாடசாலை மிகவும் கஸ்ரப்பிரதேசத்தில் அமைந்துள்ளது. இங்கு கல்வி பயிலும் மாணவர்கள் மிகவும் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்றனர். எனவே இவர்களின் பெற்றோர், கடற்றொழில், கூலித்தொழில்களில் அன்றாடம் உழைப்பவர்கள். தமது வீடுகள் அடிப்படை வசதிகள் இன்றி வாழ்வாதாரத்தை நடத்துவதால் இம்மாணவர்கள் கற்பதற்கு பல சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். எனவே இச் சத்துணவை பாடசாலையில் காலை 9.00 மணிக்கு ஒவ்வொரு நாளும் வழங்குவதால் மாணவர்கள் உற்சாகத்துடன் கல்வி பயில்கின்றனர். காலையில் உணவு உண்ணாமல் பல மாணவர்கள் வருகின்றனர். அவர்களுக்கு இது மிகவும் உடல் ஆரோக்கியத்தையும் தைரியத்தையும் கொடுக்கின்றது.

மேலும் இத்திட்டத்தின் ஊடாக மாலை நேரக்கற்றல், கற்பித்தல் செயற்பாடு நடைபெறுகின்றது. இதன் மூலம் மாணவர்கள் அடிப்படை எழுத்தறிவு, வாசிப்புத்திறன்களை பெறுகின்றனர். இப்பிரதேசத்தில் தனியார்கல்வி நிலையங்கள் எதுவும் இல்லாத காரணத்தினால் இப்பாடசாலை மாணவர்கள் மாலை நேரக் கல்வியினூடாக பயன்பாட்டைப் பெறுகின்றனர். அத்துடன் இத்திட்டத்தினூடாக மாணவர் வரவும், ஒழுங்காக காணப்படுகின்றது. ஏனெனில் காலை 9.00 மணிக்கு பசும்பால் வழங்கப்படுகின்றது. காலை உணவு உட்கொள்ளாமல் வருபவர்களுக்கு இது உற்சாகத்தை அளிக்கின்றது. பெற்றோர்களுக்கும் தமது பிள்ளைகளுக்கு

...ரும்போது மேற்பார்வை செய்கின்றனர். எனவே லண்டன் நம்பிக்கை ஒளி ...ல் வழங்கப்படுகின்ற இந்த சத்துணவுத்திட்டம் எமது பாடசாலை மாணவர்களுக்கு ...னுடையதாக அமைகின்றது. தொடர்ந்தும் முன்னெடுப்பதனூடாக அவர்களின் ...ற்பாட்டையும் உடல், உள ஆரோக்கியத்தையும் மேம்படுத்தலாமென்பதும் எமது சார்ந்த நம்பிக்கையாகும்.

நன்றி

MR.S.KANAGARATNAM
Principal
Mu/Valayanmadam G.T.M.School
Mullaitivu.

மு/தண்ணீரூற்று ஸ்ரீ ஸ்ரீ த க பாடசாலை
முள்ளியவளை
18.09.2017

இணைப்பாளர்
நம்பிக்கை ஒளி
இலங்கை

நம்பிக்கை ஒளி உணவுத் திட்டத்தின் தேவையும் பயன்பாடும்

எமது பாடசாலை மாணவர்கள் பலர் வறுமைக் கோட்டின்கீழ் வாழும் விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். மேலும் யுத்த காலத்தில் சொத்துக்களை மட்டுமல்லாது தாய் தந்தை உறவுகளையும் இழந்தவர்கள். இவர்களில் சிலர் பெண் தலைமைத்துவக் குடும்பங்களாகவும், சிலர் பாதுகாவலர்களுடனும் வாழ்ந்து வருகின்றார்கள். இந்த நிலைமையில் இவர்களுக்கு போசாக்கான உணவுத் தேவை முக்கியம் பெறுகின்றது. காலையில் பல மாணவர்கள் சாப்பிடாது வருவதனை அவதானிக்க முடிகின்றது. இவர்களுக்கு வேறு வழிகளில் சிறிய அளவிலான உணவு கிடைத்தாலும் தொடர்ந்து கல்வி கற்கக்கூடியதற்கான போசாக்குத் தேவை உடையவர்களாகவே காணப்படுகின்றார்கள்.

இந்த நிலைமையில் தங்களின் நம்பிக்கை ஒளி நிறுவனத்தினால் ஒழுங்கமைத்து வழங்கப்படும் பசும்பால் மற்றும் கடலை, பயறு, கௌப்பி போன்ற தானிய வகை உணவுகள் மாணவர்களுக்கு சிறந்த போசாக்கையும், ஆரோக்கியத்தையும் கொடுப்பதுடன் உற்சாகமாக கல்வி கற்பதற்கும் உதவியுள்ளது. இவர்களின் எதிர்காலம் சிறப்படைய தங்களது உதவி மகத்தானது. தங்களுக்கும் தங்கள் பணிக் குழுவினர்க்கும் கொடையாளிகளுக்கும் எமது மனம் நிறைந்த வாழ்த்துக்கள்

நன்றி

இப்படிக்கு

அதிபர், பாடசாலைச் சமூகத்தினர்கள்
மு/தண்ணீரூற்று ஸ்ரீ ஸ்ரீ த க பாடசாலை



இழமுனை
முள்ளியவளை
18.09.2017

இணைப்பாளர்
நம்பிக்கை ஒளி நிறுவனம்
இலங்கை.

மேற்படி எமது பாடசாலையானது மிகவும் பின்தங்கிய கிராமத்திலுள்ளது இங்கு கற்கும் மாணவர்கள் அனைவரும் வறுமைக் கோட்டிற்கு உட்பட்டவர்கள். உங்களால் எமக்கு வழங்கப்படும் காலை உணவு ஆனது எமது மாணவர்களுக்கு மிகவும் பயன்பட்டது. அந்த உணவைத் தொடர்ந்தும் தந்துதவி செய்து அவர்களை போசாக்கான மாணவர்களாகத் திகழச் செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

"நன்றி"

இவ்வண்ணம்
அதிபர்

**"நம்பிக்கை ஒளி" தன் பணியினை பரப்பி தன் ஒளிக்கதிர்களை தமிழர் வாழ் தாயகத்தில் வறுமையுற்றோர் வாழ்வு செழிப்புற பணிபுரிந்திட புலம்பெயர்வாழ் நல் உள்ளங்கள் அனைவரும் கைகோர்த்தால் அதனை மிக எளிதில் சாதித்துவிட முடியும். ஒன்றை உருவாக்குவது மிக மிக கடினம். அவ்வாறு உருவாக்கியதை உடைத்தெறிவது மிகமிக சுலபம். "ஒற்றுமையே பலம்" என்பார்கள் எத்தனை கைகள் இணைகின்றதோ அத்தனைக்கும் பலம் மிகுதியாக இருக்கும். நலன் கருதிப் பணிசெய்வதை விடுத்து உள்ளத்திலே சுயநலமின்றி வடகிழக்கு வாழ் தமிழர் வறுமையற்ற வாழ்வு வாழ வழிகாட்டுங்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# High-tech training for the ex-combatants to build their livelihoods assured

Ray of hope supports the additional expenses during the skill training period of Ex-combatants in Kilinochchi district to build their livelihood sources for an independent and secure life.

WUSC is a NGO, popular in vocational training and presently in Sri Lanka is engaged in the provision of vocational training to the needy, if there is a job guarantee for the trainees by the end of the training. As such employment providers are seeking WUSC to get talented trained people for their Development enterprises. Selection of trainees is solely by the WUSC, and for the selection they have started the study from the village level to urban areas.

This time they thought of providing training to the ex-combatants who are finding difficult to get employment due to lack of knowledge in the proper field. At present there are 4000 of those in the Kilinochchi District.

WUSC, through discussion forums identified the available employment opportunities in Sri Lanka in the technical field. In this context, they identified four sectors that need trained personal to be employed by the end of the training. The sectors are -

1. Hospitality and Tourism
2. Automobile
3. Construction
4. ICT

The selected beneficiaries are presently involved in daily paid work to cater their poor family. The training period ranges from 3 weeks to six months depends on the training sector. During the training period, as their family solely depends on the trainee for the household expenses, will be in strain. This was their concern in going for a high-tech training to build their livelihood sources. Ray of Hope is intervening in to this point to support the family and to meet the transport and or other expenses during the training period. This will boost the attitude of the trainees and will come out with talented skilled personal in the end of training to take over the designated job.

In addition to this, Ray of Hope discussed with WUSC to create groups and provide vocational training in relation to their desire to develop self-reliance among them. To build the group activities by the end of successful training assistance will be provided by Ray of Hope to them to establish an enterprise. To all these activities Ray of Hope is in need funds to make the vocational training into a development activity.

English Teaching Methodology Classes for Teachers to Uplift the Standard of English among the students

British Council invited Ray of Hope for their Annual meeting in supporting prosperity event in Jaffna resulted in planning methodology classes for English teachers in the North.

Ray of Hope attended the British Council prosperity event at Jaffna and contributed in the English language development among the students. All expressed that the standard of English among the students at all levels are very low. Most of them are found to be success in the English language examination almost all are unable to converse in English language. Even the high qualified staff officials are limited in expressing in English speaking talent to their profession but not beyond that. To improve this status, all agreed to provide English teaching methodology classes for the existing teachers.

Ray of hope is to meet the expenses of the methodology training programme that will start by January 2018. Presently bilateral discussion is on progress about the proposed training in the north. Since enough teachers are not in the cadre with the Education Department allocation of English teachers for the primary section is very low. Our planning priority is in providing English methodology training to Primary students from grade 4 to grade 5. In future this will be expands up to higher levels.

Quite a good amount of funds will be needed to implement the programme in the field.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளிநொச்சி மாவட்டத்தில் தமது சேவையால் மக்கள் மனதில் இடம் பிடித்தவர்கள் மூவர். முதலாவது ஹட்சின் அம்மையார். அடுத்தவர் குருகுலம் அப்புஜி. மூன்றாமவர் த.இராசநாயகம். அடுத்த சந்ததியை அதுவும் ஆதரவற்ற நிலையில் இருப்
போரைக் கல்வியின் மூலம்
கைதூக்கி, சமூகத்தில்
நற்பிரஜைகளாக, சமூக
சேவகர்களாக, நிர்வாகிகளாக இணைப்பதே
இவர்களின்
இலக்காக இருந்திருக்கிறது. மூவரும் இதில் குறிப்பிடத்தக்க வெற்றியை அடைந்துள்ளார்கள் என்றே கூறவேண்டும்.

ஒல்லாந்து நாட்டில்
பிறந்த ஹட்சின் அம்மையார் பெண்

ஒருவர் வல்லவராக இருக்கலாம். அல்லது நல்லவராக இருக்கலாம், இரண்டும் இணைந்ததாக ஒருவர் இருப்பது அபூர்வம். அத்தகையோரில் ஒருவர் தான் அமரர் தி.இராசநாயகம். கூட்டுறவாளனாகத் தன்னை அடையாளப்படுத்திக் கொண்ட இவர்தான் கிளிநொச்சி மாவட்டத்தின் முதல் பட்டதாரி.

இரு தடவைகள் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபராகக் கடமையாற்றியவர். 2009 இற்கு முன்னதாக இருந்த இரண்டு நிர்வாக அலகுகளுக்கிடையே
பணி புரிவது இலகுவான விடயமல்ல.

அவரின் மறைவின்போது இரத்த உறவுகள் அல்லாதோர் சொரியும் கண்ணீரின் அளவால் தீர்மானிக் கப்படுகிறது.

ஐயா, ஐயா என அந்தச் சிறார்கள் ஓலமிட்டு அழுத காட்சி அனைவரையும் நெஞ்சுருக வைத் தது.

நலிவுற்றோருக்கும், கல்வியிலும், வாழ்வாதார உதவியிலும் கல்வியிலும், ஈடுபாட்டுடன் செயற்பட்டுவரும் நம்பிக்கை ஒளி நிறுவனத்தாராகிய நாம் அன்னாரது குடும்பத்தினருக்கும், இல்லக் குழந்தைகளினதும் துயரில் பங்கு கொள்கிறோம்.

# வல்லவனும், நல்லவனுமாகிய நிர்வாகி

குழந்தைகளுக்கென கருணை நிலையம் என்ற சேவை
நிறுவனத்தை ஆரம்பித்தார்.
ஒரு வகையில் கிளிநொச்சியின் அன்னை திரேசாவாகவே இவரை மக்கள் பார்த்தனர்.

பெண்களுக்கான துவிச்சக்கர வண்டியில் திரியும் இவரது எளிமையான நடவடிக்கை, மக்கள் மனதை ஈர்த்தது. "நான் இறந்ததும் எனது சாம்பலை இரணைமடுக்குளத்தில் கரை யுங்கள்" என்று கூறியதன் மூலம் மதங்களும், மத நம்பிக்கைகளும் இரண்டாம் பட்சம்தான் கிளிநொச்சி மண்ணுக்கு
என்று நிருபித்தார்.

அப்புஜி குருகுலத்தை ஸ்தாபித்தார். குறிப்பாகப் பெண் குழந்தைகளின் நலன் குறித்துச் சிந்தித்துச் செயலாற்றினார். மலையகத்திலிருந்து தமிழ் மக்கள் அடித்து விரட்டப்பட்ட
போது அவர்களை அரவணைத்த கரம் இவருடையது.

குருகுலம் காணியில் சிலரைக் குடியமர்த்தினார். பின்னர் ஊற்றுப்புலம் என்ற கிராமத்தை
உருவாக்கி அவர்களைக் குடியமாத்தினார்.

கோப்பாய் இராசபாதையில் மோட்டார் வண்டியில் இவரும் இவரது மனைவியும் வெளி
நாட்டிலிருந்து வந்த மகளும், பேரக்குழந்தைகள் மூவருமாகப் பயணித்துக் கொண்டிருந்தபோது, அமைதிகாக்க வந்தோரின் பார்வையில் இவர்கள் பட்டுவிட்டனர். ஒரு குழந்தை மட்டும் உயிருடன் மீட்கப்பட்டது. ஏனைய ஐவரும் சடலங்களாக மீட்கப்பட்டனர்.

2009 இன் பின் சிறுவர் இல்லக் கட்டமைப்புகள் சீர் குலைந்திருந்தன. "முள்ளில் போட்ட சேலையைப் பக்குவமாகக் கழற்றி எடுப்பது போல் குருகுலம், மகாதேவ ஆச்சிரமம் போன்றவற்றின் சொத்துக்களை விடுவித்தார்.
இவரது ஆளுமை பற்றிய நம்பிக்கை கிளிநொச்சியில் வாழ்ந்த மக்களிடமும் அங்கிருந்து புலம் பெயர்ந்தோரிடமும் இருந்தது. கல்வியில் மட்டுமல்லாது மாணவர்கள் நின்றுவிடாது கராத்தே, விளையாட்டுத்துறை போன்ற பல்வேறு இணைப்பாட விதான செயற்பாடுகளில் மகாதேவ ஆச்சிரமச் சிறார்கள் தமது திறமையை நிருபிக்க வழிவகை செய்தார்.

ஒருவரின் வாழ்வின் பெறுமதி






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவன் இவ்வுலக ஆஸ்தி உடையவனாயிருந்து, தன் சகோதரனுக்குக் குறைச்சலுண்டென்று கண்டு, தன் இருதயத்தை அவனுக்கு அடைத்துக்கொண்டால், அவனுக்குள் தேவ அன்பு நிலைகொள்ளுகிறதெப்படி?

– யோவான் 3 :17

நம்பிக்கை ஒளியும்
இம்மானுவேல் திருச்சபையும்
இணைந்து வழங்கும்

# இலவச சேவை

## இலவச ஆங்கில மொழிபெயர்ப்புச் சேவை

விண்ணப்பப் படிவம் பூர்த்தி செய்தல்
கடிதம் எழுதுதல்
கடிதம் வாசித்து பொருள் விளக்குதல்
மற்றும் இது போன்ற சேவைகள்

**மேலும் தகவலுக்கு அணுகவும்:**

திங்கட்கிழமை முதல் வியாழன் வரை
காலை 10.00 மணி முதல் மதியம் 3.00 மணி வரை
**07817 - 516350**

**Ray of Hope**
**&**
**Immanuel Tamil SDA Church jointly presents**

# Free Service!

Free English Translation Service

Filling Up of Applications
Writing Letters
Reading Letters and more of such Services

for information Contact:
Mon - Thursday
10.00 a.m to 3.00 p.m
07817-516350

நம்பிக்கை ஒளி
RAY OF HOPE

Immanuel Tamil SDA Church
இம்மானுவேல் தமிழ் SDA
திருச்சபை

## முதுமையில் தனிமையா ? தனிமையில் மனவேதனையா ?

### கவலையை விடுங்கள்

### "நம்பிக்கை ஒளி" யினால் உங்களுக்காக நடாத்தப்படும் ஒன்று கூடல்

*வியாழக்கிழமைகளில் காலை 11 மணி முதல் 3 மணி வரை*

தனிமை உங்களை வாட்டுகிறதா? வெளியே சென்றுவர மனமிருந்தும் எங்கே சென்று யாரைப் பார்த்து உங்கள் மனச்சுமையை பகிரலாம் என்று ஏங்குகின்றீர்களா ? அதனால் தான் உங்களை தேடி நம்பிக்கை ஒளியாய் நம்பிக்கை கொடுக்க உங்களை அழைக்கின்றோம். உங்களுக்காக உடற்பயிற்சி, யோகா, விளையாட்டு, கலந்துரையாடல், பொழுது போக்கு (திரை நிகழ்ச்சி), மற்றும் மதிய உணவுடன் இன் நாளில் ஒன்றுகூடி மன சுமையை நீக்கி, மன அமைதி பெற்று, மன உறுதியுடனும் செல்வோம் வாரீர்.



எங்களுடன் நீங்களும் இணைய விரும்பினால்
முன்கூட்டியே உங்கள் விபரங்களைப் பதிவுசெய்யும்படி கேட்டுக்கொள்கிறோம்.

நம்பிக்கை ஒளி
RAY OF HOPE

"RAY OF HOPE"
G05, Courtenay House, 10. Courtenay Road,
East Lane Business Park,
N.Wembley HA9 7ND

Tel: 02086179343
Mobile: 07534814606 or 07958683361



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதிக்கப்பட்டோருக்கான இரண்டாம் கட்ட உதவிகள்

ஐரோப்பிய நாடொன்றில் நீண்ட காலம் வாழுகின்ற இருவரை சந்திக் கக் கிடைத்தது. அவர்கள் கதைக்க ஆரம்பித்த விடயம் - தாம் அதுவரை தமது ஊராருக்கு உதவியது தொடர் பானதாகும். அவர்கள் தமது எதிர் பார்ப்பையும் ஆதங்கத்தையும் இவ்வாறு வெளியிட்டனர்.

**"நாங்கள் எங்கட ஊரிலிருந்து எமது நாட்டில் வாழு கின்ற அனைவரையும் இணைத்து ஓர் அமைப்பை உருவாக்கி, மாதாந்தம் ஒரு தொகைப் பணத்தைச் சேர்த்து ஊரவரின் முன்னேற்றத் திற்காகவும், பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்கத்துடனும் செய்யப்பட்ட உதவிகள் தொடர்பில் இங்கு வந்து தேடிப்பார்த்தபோது எங்கள் எதிர்பார்ப்பு வீணடிக் கப்பட்டதை உணர்கிறோம். இங்குள்ளவர்கள் நினைக்கி றார்கள் நாங்கள் வெளிநாடு களில் காசை மரத்தில் பிடுங்கி எடுக்கிறோம் என்று"**

அவர்கள் அனுப்பிய பல இலட்சம் ரூபா பணத்திற்கு என்ன நடந்தது என்பதை பணத்தைப் பெற்றுக் கொண்டவர்கள் கூறும் போது இவர்கள் அனுப்பிய காசை ஆடம்பர செலவுக்காக செலவழித்து விட்டார்கள். ஏதோ ஒரு வகையில் செலவழித்து விட்டதாகக் கணக்குக் காட்டினார்கள் என்று கவலைப்பட்டனர்.

நான் அவர்களிடம் கேட்டேன் நீங்கள் எதை எதிர்பார்த்து இந்தப் பணத்தை அனுப்பினீர்கள்? என்று அதற்கு அவர்கள் ஒரு விவசாயிக்கு தரமான லான்ட்மாஸ்டர் ஒன்று வாங்கிக் கொடுத்திருக்கலாம், நீர் இறைக்கும் இயந்திரம், பசு மாடுகள், ஆடுகள், கோழிகள், கைத்தொழில் முயற்சிக்கான இயந்திரங்கள். கோழிக்குஞ்சு பொரிக்க வைக்கும் இயந்திரம், சிறு கடை வியாபாரம் என ஊரவர்கள் தற்போது செய்து வருகின்ற தொழிலை மேலும் விரிவுபடுத்துவதே தங்களது நோக்கம் என்றனர்.

அவ்வாறு செய்திருந்தால் இன் றைக்கு ஊருக்குள் பல உழவியந்தி ரங்கள், பசு மாடுகள் எனப் பல்கிப் பெருகியிருக்கும். மண்ணாகக் கிடந்த தெருக்களுக்கு கல்லுப் பதிக்க வெளிநாட்டு உழைப்பு பயன்படுத்தப்பட்டது வேதனைதான். இவை அவசியமற்றவை.

"முதற்கட்ட உதவிகள் சரியான முறையில் வழங்கப்பட்டிருந்தால் அவர் களின் தொழிலை மேலும் மேம்படுத்த இரண்டாம் கட்ட உதவிகளைத் தொடங் கியிருக்கலாம். இங்கு முதலாம் கட்டமே நடக்கவில்லையே"

என்றனர்.

இரண்டாம் கட்டமென்று எதை எதிர்பார்க்கிறீர்கள் என்று கேட்டதற்கு முதற்கட்டத்தில் ஒரு மாடு வாங்கி யவன் ஏற்கனவே தம்மிடம் இருந்த மாட்டுடன் இணைத்து வளர்க்கும் போது அவர்களுக்குத் தேவை இரண்டாம் கட்ட உதவியாக பாதுகாப்பான கொட்டில்களை அமைப்பதாகும். இப்படி ஒவ்வொரு முதற்கட்ட உதவியையும் நல்ல முறையில் பயன்படுத்தி முன்னேற்றம் கண்டவர்களுக்கு இரண்டாம் கட்ட உதவியை வழங்கலாம்.

நாம் வழங்கும் பணத்திற்கு வட்டியோ, முதலைத் திருப்பித்தரவேண்டிய அவசியமோ இல்லை. ஆனால் அவர்கள் அதன் பின்னரும் யாரிடமும் கையேந்தாது சுயமாக வாழவேண்டும் என்பதே எங்கள் எதிர்பார்ப்பு என்றார்.

இந்தக் கொடையாளர்களின் கருத்துப்படி பல கோடி ரூபா வெளிநாட்டு நிதிகள் பொருத்தமற்ற வேலைத்திட்டங்களுக்குச் செலவிடப்பட்டதாலேயே மக்கள் தொடர்ந்தும் வறுமை நிலை யில் உள்ளனர். பயனாளிகளும் பயனாளிகளுக்கு இடையில் நிற்பவர்களும் பொறுப்பற்றவர்களாய் இருப்பதால், வெளிநாட்டு உதவிகள் உரியவர்களுக்கு வழங்கப்படாத நிலையில், வழங்கப்பட்ட உதவிகள் வெற்றியைத் தரவில்லை.

வெளிநாட்டில் இருப்பவர்கள் வழங்கிய பணம் உண்மையானது. ஆனால் அப்பணத்தை எதற்காக செலவழிக்கப் போகிறோம் என்று பயனாளிகளும், இடையில் நின்றவர்களும் கூறியது பொய்யே.

இந்த அணுகுமுறையால் வெளிநாட்டவர் தொடர்ந்தும் உதவிக் கொண்டே இருப்பார்கள் என்ற போலியான மனநிலை மக்கள் மத்தியில் மேலோங்கி உள்ளது.

வெளிநாட்டிலிருந்து உதவுவோரும் ஏன், எதற்கு, எப்படி என்று கேள்வி கேட்க வேண்டும். இதன் மூலம் சுத்துமாத்து விடயங்கள் பல தவிர்க்கப்பட வாய்ப்பிருக்கும். இதனை உதவி வழங்குவோரும் உதவி பெறுவோரும் பொறுப்புடன் செயற்படுத்துவதே சிறந்தது.

**விஜயன்.**

இரு கை கூப்பி கடவுளை
வணங்குவதை விட ...
ஒரு கை நீட்டி உதவி செய் ....
இரு கை உன்னை வணங்கும்
கடவுளாக .......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெருக்கடியான நேரத்தில் "நம்பிக்கை ஒளி"

நெருக்கடியான நேரத்தில் "நம்பிக்கை ஒளி" நிறுவனம் வழங்கிய தொழில் முயற்சிக்கான வட்டியில் லாக் கடன் மூலம் எனது வியாபாரம் உட்பட அனைத்து முயற்சிகளையும் என்னால் விரிவாக்க முடிந்தது. இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ் மக்கள் மத்தியில் கெனடி எனும் பெயர் மூலம் பிரபலமான யேசுமி பெர்னாண்டோ.

முருங்கன்பிட்டி, மன்னாரைச் சேர்ந்த இவர், 1994 ஆம் ஆண்டு பலாலி முகாமுக்குள் கைதானார். சமாதான காலத்தில் 2002 விடுதலைப் புலிகள் நல்லெண்ண முயற்சியாக சில படையினரை விடுவித்தனர். அரசும் தனது நல்லெண்ணத்தின் வெளிப்பாடாக தன்னிடம் கைதியாக இருந்த இவரை விடுதலை செய்தனர்.

சுமார் 08 வருடத்தின் பின் கைதி என்ற நிலை மாறி சுதந்திர மனிதனான வன்னி மண்ணில் தனது கால்களைப் பதித்தார் கெனடி. இதன் பின்னர் தனக்குப் பொருத்தமான பெண்ணொருவரைப் பார்த்து (விமல ராணி) இவர் தனது வாழ்க்கைத் துணையாக்கிக் கொண்டார். இறுதி யுத்தத்தின் பின்னர் (2009) மீண்டும் கைதியானார். புனர்வாழ்வளிக்கப்பட்டு 2012 ஆம் ஆண்டு மீண்டும் சமூகத்தோடு இணைக்கப்பட்டார்.

இவருக்கு சர்மிலன் (9ம் ஆண்டு) சாதனியன் (4ம் ஆண்டு) என இரு பிள்ளைகள் உண்டு. இவர்கள் முருங்கன் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்று வருகின்றனர்.

இவர்கள் தமது வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்கில் சுமார் 100 கோழிகளை வளர்க்கக்கூடியதாக கூடு அமைத்து அதற்கும் 25 குஞ்சுகளே வளர்க்கின்றார். இவர்களுக்கு இந்தியாவின் நிதியுதவியுடன் வீட்டுத் திட்டப் பயனாளிகளில் ஒருவராகத் தெரிவு செய்யப்பட்டு, இவருக்குச் சொந்தமான காணியில் குடியிருப்பதற்கு வீடு அமைத்துள்ளார்.

"நம்பிக்கை ஒளி" நிறுவனத்திடம் தொழில் முயற்சிக்காக வட்டியில்லாக் கடனைக் கோரினார். இவர் தனது சுயதொழிலாக தண்ணீர் வியாபாரம் செய்வதாகத் தீர்மானித்துள்ளார். இவ் வியாபாரத்தில் சுமார் ஒரு இலட்சம் வரை நிகர லாபமாகப் பெறமுடியும் எனத் தெரிவித்தார்.

இவரது முயற்சிக்கு கைகொடுக்கும் முகமாக "நம்பிக்கை ஒளி" நிறுவனம் வட்டியில்லாக் கடனாக ஒருதொகைப் பணத்தை இவரது வீட்டில் வைத்துக் கையளித்து. எதிர்பார்த்தபடி இத்தொகையை மீளச் செலுத்தினால் மேலும் கூடிய தொகையை வட்டியில்லாக் கடனாக வழங்க முடியும்.

"நம்பிக்கை ஒளி" நிறுவனம் தந்த தொகையை முதலிட்டு எனது வியாபார நடவடிக்கைகளை விஸ்தரித்தேன். அதன் மூலம் தற்போது நம்பிக்கை ஒளியைத் தவிர வேறு யாருக்கும் கடனாளியாக இல்லை. கூடிய விரைவில் இந்தக் கடன் தொகையை மீளச் செலுத்தி முடிப்பேன். அதன் மூலம் மேலும் இதே நிறுவனத்திடமிருந்து கடன்பெற்று கூடிய வாடிக்கையாளரைக் கொண்ட நிறுவனமாக எனது வணிக நடவடிக்கைகளைத் தொடர்வேன் என உறுதியளித்துள்ளார்.

தங்களது முயற்சிக்கு வாழ்த்துக்கள். ஊக்கமுடைய தொழில் முயற்சியை கைவிடாதீர்கள். தங்கள் முன்னேற்றத்-தை நம்பிக்கை ஒளி அவதானித்துக் கொண்டிருக்கிறார்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவர்கள் குடும்பத்தை முன்னேற்றுங்கள்

பவானந்தன் தர்சினி திருநகர், 4ம் யூனிற், முருகன் கோவிலடி, மல்லாவியை முகவரியாகக் கொண்டுள்ள இவர் ஒரு போராளியாகவிருந்து 2009 இல் புனர்வாழ்விற்காக தடுத்து வைக்கப்பட்டு பின்னர் விடுவிக்கப் பட்டவர்.

37 வயதான இவர், மூன்று வயதுக் குழந்தை ஒன்றின் தாயாவார். இவரது கணவரும் போராளியாக இருந்து தாக்குதல் ஒன்றின்போது ஒரு கண்ணையும், ஒரு காதையும் இழந்தவர். உடலில் பல்வேறு காயங்கள் ஏற்பட்டுள்ளது. இவரால் தொழில் எதனையும் செய்ய முடியாத அளவில் அவரது உடல்நிலை காணப்படுகிறது.

இதனால் நிரந்தர வருமானம் ஒன்று இல்லாமலே வாழ்க்கையை நடத்திச்செல்லவேண்டிய நிலை உள்ளது. இதனால் தர்சினியின் குடும்பம் நாளாந்தம் கஸ்டத்தை அனுபவித்து வருகிறது.

தர்சினி கைத்தறி நெசவு வேலையில் அனுபவம் உள்ளவர். அதற்கான மேலதிக பயிற்சிகளையும் பெற்றுள்ளார். இவரது கணவனின் உதவியுடன் தனக்குத் தெரிந்தவேலையான கைத்தறி நெசவுதறி ஒன்றினை ஆரம்பிக்க உத்தேசித்துள்ளார்.

இதற்கான உதவியையே நம்பிக்கை ஒளி மூலம் எதிர்பார்க்கிறார்.

இந்த நெசவுத் தொழிலின் மூலம் 12 மாதங்களும் உழைக்கும் வாய்ப்பு தர்சினிக்கு உண்டு. இவருக்கு ஒரு தடவை உதவி செய்தால் அதைப் பயன்படுத்தி தனது குடும்ப முன்னேற்றத்தினை நிலைநிறுத்திக்கொள்ள இவரால் முடியும்.

தமது இளமைக்காலத்தை தமிழ் மக்களின் விடுதலைக்காக அர்ப் பணித்து எந்தவிதமான கொடுப்பனவையும் பெறாது உழைத்த இத் தம்பதிகள் இன்று தாம் வாழ வழியின்றி சிரமப்படுகின்றனர்.

இவர்களுக்கு உதவவேண்டியது வசதி படைத்த அனைவரதும் கடப்பாடாகும். இவ்வாறான வாழ்வாதார உதவியின் மூலம் அவர்களது வாழ்வில் நம்பிக்கை பெற்று, தமது சொந்தப் பொருளாதாரத்தில் தலை நிமிர்ந்து வாழவும் வழியேற்படும்.

முன்னேற்றத்திற்காக காத்திருக்கும் இந்தத் தம்பதியினருக்கு விரைந்து உதவுவது சாலச் சிறந்தது.

இதன்மூலம் அவர்களை இந்தச் சமூகத்திற்கு பாரமாக இருக்கும் நிலையிலிருந்து விடுவிக்க முடியும். எதிர்காலத்தில் இவர்கள் ஏனையவர்களுக்கு உதவக் கூடியவர்களாக மாறுவார்கள் என்பதில் ஐயமில்லை.



நெசவுத் தொழிலின் மூலம் 12 மாதங்களும் உழைக்கும் வாய்ப்பு தர்சினிக்கு உண்டு. இவருக்கு ஒரு தடவை உதவி செய்தால் அதைப் பயன்படுத்தி தனது குடும்ப முன்னேற்றத்தினை நிலை நிறுத்திக் கொள்ள இவரால் முடியும்.

## வெளிநாட்டில் வேலை செய்வோரும் தாயகத்தில் உள்ளோரும்..

வெளிநாடுகளில் தொழில் நிமித்தம் தங்கியிருக்கும் நம்மவர் "புலம்பெயர்ந்தோர்" அல்லது "அகதிகள்" என்ற பட்டப்பெயருடன் இங்குள்ள குடும்ப முன்னேற்றத்திற்காக 18 மணித்தியாலங்கள் வரை வேலை செய்வோரும் உள்ளனர்.

நித்திரை கொள்ள நேரமில்லாது ஒவ்வொரு வேலைகளுக்கு மாறிமாறி ஓடுவதும் அங்கு ஒரு சிறிய பிழை நடந்துவிட்டால் கூட பல வருடங்கள் பணிபுரிந்த இடத்தில் ஏன் என்று கேட்காமலே பணியிலிருந்து விலக்கிவிடுவர் என்ற பயத்தில் விசுவாசமாக இருக்கவேண்டிய நிர்ப்பந்தமும் அவர்களுக்கு உண்டு.

அவர்களும் அங்கு என்ன தொழில் செய்கிறோம் என்று வெளிப்படையாகக் கூறுவதில்லை. அதனால் அவர்கள் அங்கு படுகின்ற துன்பங்கள் அவர்களின் குடும்பத் தவர்களுக்கு தெரிந்திருப்பதில்லை.

நள்ளிரவுக்குப் பின்பும் கண்விழித்து அவர்கள் வேலை செய்து அனுப்பும் பணத்தை வைத்து இங்குள்ளவர்கள் நள்ளிரவுக்குப் பின்பு வரை மது அருந்துவதும், படம் பார்ப்பதும், வாள் சண்டை, விபத்துக்கள் என அவர்களின் உழைப்பைக் கரைக்கின்ற நிலையே காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது நிலை யாருக்கும் ஏற்படக்கூடாது



**இல**.311, சோழநிலா கிராமம், கரியாலை, நாகபடுவான் என்னும் கிராமத்தில் வசிக்கும் கமலதீபன் உதயகுமாரி ஆகிய இவருக்கு கர்ணன், தமிழ் மாறன் எனும் இரண்டு பிள்ளைகள்.

இவரது கணவர் இராஜகோபால் கமலதீபன் கடந்தகால யுத்தத்தின் போது இடம்பெயர்ந்து செல்கையில் 10.03.2009 இல் சுதந்திரபுரம் பகுதியில் இடம்பெற்ற எறிகணைத் தாக்குதலில் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

அன்றிலிருந்து மிகவும் கஸ்ரப்பட்டு எனது பிள்ளைகள் இருவரையும் வளர்த்து வரும்போது, நாகபடுவானிலிருந்து - முழங்காவில் மகா வித்தியாலயத்திற்கு பாடசாலைக்கு அனுப்பி வந்தேன். பஸ்ஸில் பாடசாலை சென்று பூநகரி பிரதான வீதியில் பஸ்ஸை விட்டு இறங்கியவேளை, வீதியால் வேகமாக வந்த தென்னிலங்கை சிங்கள மீனவ வியாபாரிகளின் வாகனம் மகனை மோதி யதில் எனது மகன் அவ்விடத்திலேயே உயிரிழந்தான்.

எனது மகனை குறித்த வாகனத்தில் வந்தவர்கள் வீசிவிட்டு செல்ல முற்பட்டவேளை அயலவரால் மீட்கப்பட்டு எனக்குத் தெரிவித்தனர். எனது பரிதாப நிலை யாருக்கும் வரக்கூடாது என கடவுளை வேண்டுகின்றேன்.

தற்போது ஒரு மகனுடன் சோழர் கிராமத்தில் வாழ்ந்து வருகின்றேன். குடும்ப உறவினர் என சொல்லிக்கொள்ள யாரும் இல்லை. ஒரு ஏக்கர் காணி அதில் அமைந்த வீட்டைத் தவிர என்னிடம் சொல்லிக்கொள்ள சொத்தொன்றும் இல்லை. மிகவும் வறுமையுடனேயே வாழ்கின்றேன் எனத் தெரிவிக்கின்றார்.

இவரது நிலையை கருத்திற்கொண்டு இவருக்கு உதவிட தாயக உறவு-களே முன்வாருங்கள். "நம்பிக்கை ஒளி" யுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

# இவர்கள் வாழ்வு வளம்பெற உரமூட்டுங்கள்....



**த**னபாலசிங்கம் காந்திராசா. இவரது மனைவி நாகபூசணி ( இவர் ஒரு புற்றுநோயாளி). இவர்களுக்கு இரண்டு பிள்ளைகள் இருக்கின்றனர். சுலோஜன் (தரம் -8) துவாரகன் (தரம் 5ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் இவ்வாண்டு 169 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார்) இருவரும் கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் கல்வி கற்கின்றனர்.

காந்திராசா முன்னாள் போராளியாக இருந்தமையால் புனர்வாழ்வு முகாமுக்கு அனுப்பப்பட்டு 2012 ஆம் ஆண்டு விடுதலையா-னவர். இவரது உடலில் பல காயங்கள் ஏற்பட்டதால் கூலி வேலைக்-குச் செல்ல முடியாது.

இவரது பொருளாதார நிலைமை காரணமாக தனியார் பாதுகாப்புச் சேவையில் இணைந்து பாதுகாப்புக் கடமையாற்றி வருகின்றார்.

இவரது மனைவிக்கு 06.08.2017 கிளிநெச்சி வைத்தியசாலையில் சத்திசிகக்சையப்பட்டது. இதன் பின்னர் இவரது தலை முடிகள் உதிர்ந்து விட்டது.

இவரது மனைவியும் கட்டட நிர்மாண நிறுவனம் (தனியார்) ஒன்றில் பணி புரிந்தார். இவரது நோய் காரண-மாக இவரை வேலையி லிருந்து நிறுத்தி விட்டார்கள்.

தற்போது திருவையாறு 2 ஆம் பகுதியில் நண்பர் ஒருவரது வீட்டில் வசித்து வருகின்றார்.

வவுனியாவில் இவருக்கு மேட்டு நிலக்காணி 2 ஏக்கர் உள்ளது. அதில் விவசாயம் செய்து அங்கு விளைந்த நெல்லை தமது உணவிற்காகப் பயன் படுத்துகின்றனர்.

1985 1990 வரை விவசாயம் செய்த அனுபவம் இவருக்கு உண்டு. ஆனால் விவசாயம் செய்வதற்குரிய நீர் வசதி இல்லை எனக் கூறுகின்றார்.

அதற்காக கிணறு ஒன்றை அமைத்தால் அதன் மூலம் விவசாயம் செய்ய முடியும் என்ற எதிர்பார்ப்பில் உள்ளார்.

தற்போது 2 கிழமைக்கு ஒரு முறை தெல்லிப்பளை வைத்தியசாலைக்கு மனைவியின் வைத்தியத்திற்காக சென்று வரும் செலவே அதிகமாக உள்ளது என்கிறார்.

"நம்பிக்கை ஒளி" நிறுவனத்தினர் தமக்கு உதவிட முன்வர வேண்டுமென தயவுடன் கேட்டு நிற்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருண்ட என் வாழ்விற்கு ஒளியேற்றிய "நம்பிக்கை ஒளி"



"எனக்கு கண்பார்வை கிடைத்ததே பெரிய விடயம். நான் சுயமாக நடமாடித் திரிகின்றேன். பரீட்சார்த்தமாக வீதியால் ஒருநாள் மோட்டார் சைக்கிளும் ஓடிப்பார்த்தேன். பத்திரிகைகள், சஞ்சிகைகள், புத்தகங்கள் வாசிக்க முடிகிறது. தனிமையில் இருக்கும் எனக்கு இவை தான் துணையாக உள்ளன. எனது கண் சத்திர சிகிச் சைக்கு நிதியுதவி வழங்கிய நம்பிக்கை ஒளி நிறுவனத்துக்கு எனது நன்றிகள்".

இவ்வாறு தெரிவித்துள்ளார் புதுக்குடியிருப்பு கைவேலிப் பகுதியைச் சேர்ந்த சூரி என்றழைக்கப்படும் கிருஸ்ணசாமி சந்திரகுமார் (வயது -36) மின்சார வசதிகூட இல்லாத சிறிய தற்காலிக வதிவிடத்தில் வசித்து வரும் இவரைக் கடந்த 09.10.2017 அன்று சந்தித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். கிணற்றைக் கட்டி முடிக்கவோ ஏதும் தொழில் முயற்சிகளில் ஈடுபடவோ முடியாமல் இவர் வாழ்ந்து வருகிறார்.

"உங்களுக்கு என்ன தேவைப் படுகிறது என்பதை தெரிவித்தால் அதனை நாம் நம்பிக்கை ஒளி நிறுவனத்தினருக்கு அறிவிக்கிறோம்" என்று தெரிவித்தபோதே அவர் மனம் நிறைந்த நன்றி உணர்வுடன் மேற்கண்டவாறு தெரிவித்தார். இவரைப் பற்றிய விபரங்களைத் திரட்டியபோது தயங்காமல் அனைத்தையும் வெளிப்படுத்தினார்.

"எனது சொந்த இடம் புதுக்குடியிருப்பு 7 ஆம் வட்டாரம். மத்திய கல்லூரியில் க.பொ.த.உயர்தரம் கற்றுக்கொண்டிருக்கும்போதே போராட்டத்தில் இணைந்தேன். பின்னர் தேர்வை எதிர்கொண்ட நான், தமிழில் A, இந்து நாகரீகம் B, அளவையியல் C என்ற பெறுபேற்றைப் பெற்றுச் சித்தியடைந்தேன்.

05.02.2017 அன்று களமுனையில் (கேப்பாபுலவு) எறிகணைத் தாக்குதலின்போதே கண் பார்வையை இழந்தேன். உடலில் இன்னமும் பாதிப்புக்கள் உள்ளன. யுத்தம் நிறைவடையும் வரை பஞ்சும் ஓடிக்கொலோனுமே எனக்கு மருந்தாய் அமைந்தன. (கண்ணுக்கு) எனக் குறிப்பிட்டார். கப்பல் மூலம் புல்மோட்டை வைத்தியசாலைக்குச் சென்ற இவர், போராளியாக இருந்தவர் என்ற வகையில் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விடுதலையானார்.

வவுனியா உட்பட பல்வேறு இடங்களில் இவர் சிகிச்சை பெற்று வந்தார். இவருக்குக் கிடைத்த தகவலின்படி கொழும்பு ஆசிரி வைத்தியசாலையிலுள்ள பிரபல கண் வைத்திய சத்திரசிகிச்சை நிபுணர் மங்கள தனபாலிடம் போனால் கட்டாயம் கண்பார்வை கிடைக்கும் என்ற நம்பிக்கை ஏற்பட்டது.

ஆனால், அதற்குப் பெருந்தொகை பணம் தேவைப்பட்டது. ஜேர்மனியிலுள்ள ஒரு தொண்டு நிறுவனம் இவருக்கு உதவ முன்வந்தது. இவரது நிலைமை குறித்து அந்நிறுவனம் பகிரங்கப்படுத்தியது. இவரைக் கண் வைத்தியர் ஒருவரிடம் அழைத்துச் சென்றது.

இது பற்றிக் இவர் குறிப்பிடு கையில், "என்னை ஒருவரிடம் அழைத் துச் சென்றனர். அவருடனான உரை யாடல் எனக்குத் திருப்தியளிக்க வில்லை. "அவர் உண்மையில் கண் வைத்தியதானா என்ற சந்தேகமும் ஏற்பட்டது. எனவே எனக்குக் கண் பார்வை கிடைக்கும் என சட்டத்தரணி மூலம் உத்தரவாதம் தரவேண்டும்" என வலியுறுத்தினேன். சுமார் ஒரு லட்சம் ரூபா வரை செலவாகும் என வைத்தியர் குறிப் பிட்டார். சட்டத்தரணி மூலம் இந்த உத்தரவாதத்தைத் எனக்கு வழங்கத் தயாராக இருக்கவில்லை. பின்னர் லண்டனில் இருக்கும் நலன்விரும்பி ஒருவரின் தொடர்பு எனக்குக் கிடைத்தது. அவருடன் தொடர்புகொண்டு அவரிடம் எனது நிலைமை எடுத்துரைத்தேன்.

எனது வைத்தியச் செலவுக்கு சுமார் நான்கு இலட்சம் வரை செலவாகும் என சில நபர்களிடம் கேட்டறிந்ததில் நான் கணிப்பிட்டிருந் தேன். இந்நபர் எனது நிலைமையை "நம் பிக்கை ஒளி" நிறுவனத்திற்கு எனது நிலைமையை எடுத்துரைத்திருக்கின்றார்.

"நம்பிக்கை ஒளி" நிறுவனம் எனக்கு ஒரு லட்சம் ரூபாவை அனுப்பி வைத்தது. எனது காணியை ஈடு வைத்து ரூபா 02 லட்சம் பெற்றுக் கொண்டேன். ஆகஸ்ட் 11ம் திகதி சத்திரசிகிச்சை நடைபெற்றது. இதற்கு மூன்று லட்சத்து எழுபத்திரண்டாயிரம் ரூபா அறவிட்டார்கள்.

முன்னாள் போராளியான ஒருவர் எனது நண்பராவார். இவர் என்னோடு எனக்குப் பக்கத்துணையாக இருந்தார். மங்கள தனபால் என்னும் வைத்தியர் நன்றாக எனது கண் சிகிச்சையை செய்துள்ளதால், எனது ஒரு கண்ணுக்குப் பார்வை கிடைத்துள்ளது. மற்றைய கண்ணுக்கும் பார்வை கிடைத்தால் மிக மகிழ்ச்சியடைவேன். என் வாழ்வுக்கு ஒளிகாட்டிய "நம்பிக்கை ஒளி" நிறுவனத்தினருக்கு என் வாழ்நாள் உள்ளவரை நன்றியுள்ளவனாக இருப்பேன்.

உயர்தரத்தில் A, 2B பெறுபேறு இருந்தும் இதுவரை கண்பார்வை இல்லாததால் அரச வேலைக்கு விண்ணப்பிக்க முயறாமற் போயிற்று. இப்போது 36 வயதுக்கு மேலாயிற்று. அரச வேலை இனிமேல் கிடைப்பது சாத்தியமற்றது.

எனது வாழ்வை முன்னேற்றப்பாதையில் கொண்டு செல்வது எனது கடமையாகவுள்ளதால் விவசாயம் செய்து எனது ஈடுவைத்த காணியை மீட்டெடுப்பதும் வாழ்வாதாரத்தை உயர்த்துவதுமே எனது குறிக்கோளாக உள்ளது.

விவசாயம் செய்வதற்கு எமது பகுதியில் நீர் பிரச்சினை உள்ளது. எமது பகுதியில் ஆழமான கிணறுகள் தான் உள்ளன. 25 முழத்துக்கு மேல் தான் கிணறுகள் இருக்கும். இதற்கு 106 வரி கற்கள் கட்டவேண்டும். ஒரு வரிக்கு 28 கற்கள் தேவை. சீமெந்து மட்டும் 80 பைற்கற்றுக்கு மேல் தேவை. இதனைவிட மணல், கூலி என மிகுந்த சிரமம் உள்ளது.

எனது குடும்பம் மிகவும் கஸ்டமான சூழ்நிலையில் வாழ்கிறார்கள். எனக்கு இரு சகோதரிகள் உள்ளனர். அவர்களில் ஒருவர் விதவையாக உள்ளார் (போராளி ஒருவரைத் திருமணம் முடித்து அவர் இறந்துவிட்டார்) மற்றையவர் யாழ். போதனா வைத்தியசாலையில் நோயாளரைப் பராமரிக்கின்றார். (நாட்கூலிக்கு)

எனக்கு வாழ்வில் நம்பிக்கை ஊட்டி, கண்ணுக்கு ஒளி பெற்றுத்தந்த "நம்பிக்கை ஒளி" நிறுவனத்தினர் தொடர்ந்தும் எனது வாழ்வாதாரத்தில் கைகொடுப்பீர்கள் என நம்பிகையுடனும் என்னுடைய குடும்பத்தினருடன் நன்றிகளைத் தெரிவித்து நிற்கின்றேன். எமக்கு உதவிட தங்கள் நல் மனதைத் திறவுங்கள்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுண்கடன் / நுண்நிதி

முறைசார் நிதி நிறுவனங்கள் மிகையான நிதி உள்ளவர்களிடத்தில் நிதியை சேகரித்து, நிதி தேவைபடுபவர்களுக்கு கடன் வழங்குகின்றன. இவை சேமிப்பவர்களுக்கும் கடன்பெறுபவர்களுக்குமிடையில் இடையீட்டாளர்களாக செயற்படுகின்றனர். நிதியைச் சேமிப்பவர்களுக்கு வட்டியை வழங்குகின்றன. அதேபோல் நிதியைக் கடன் பெறுபவர்களிடமிருந்து வட்டியை அறவிடுகின்றன. இவ்விரண்டு வட்டி வீதங்களுக்குமிடையிலான வேறுபாடே இந்த நிறுவனங்களின் பிரதானமான வருமானமாகும். இந்த நிறுவனங்கள் கடன் வழங்கும் போது அதற் காக கடன் பெறுபவர்களிடமிருந்து பொறுப் புக்களைப் பெற்றுக்கொள் கின்றன.

இந்தப் பொறுப்புக்கள் எதுவும் இல்லாமல் கடன் வழங்க முன்வருவதில்லை. எனவே, சொத்துக்கள் எதுவுமில்லாத ஏழை எளியவர்கள் இந்த முறைசார் நிதி நிறுவனங்களிடமிருந்து கடன்களைப் பெற முடிவதில்லை. எனவேதான் மிகவும் வறியவர்கள் அவர்களது வாழ்வாதரத்தை தேடிக்கொள்வதற்காக, வருமானத்தை பெருக்குவதற்காக தேவைப்படுகின்ற நிதியினை வழங்குவதற்கு உருவான செயற்பாடே நுண்நிதியாகும். அதேசமயம் வறியவர்களை முறைசாராக் கடன் வழங்குநர்களது சுரண்டலில் இருந்து பாதுகாப்பதும் நுண்நிதியின் நோக்க மாகும்.

நுண்கடன்/ நுண்நிதி என்னும் இரு பதங்களையும் மாறிமாறி பயன்படுத்துவது வழக்கமாக இருந்தாலும், இவை இரண்டிற்குமிடையில் வேறுபாடு உண்டு. நுண்கடன் என்பது கடன் வழங்குவது மட்டுமே. (அதாவது கடன் வழங்கும் செயற்பாட்டை மட்டுமே குறிப்பிடும்) ஆனால், நுண்நிதி என்பது கடன் வழங்கலுடன் சேமிப்பு, காப்பீடு, வழிகாட்டல்கள், பயிற்சிகள், சந்தைப் படுத்தல் போன்ற பல செயற்பாடுகளை உள்ளடக்கியிருக்கும். அதாவது கடன் பெற்றவர்கள் அதனைச் சிறந்த முறையில் முதலீடு செய்து வருமானம் பெற்று, கடனைத் திருப்பிச் செலுத்தும் ஆற்றலை உறுதிப்படுத்தும் செயற்பாடுகளையும் உள்ளடங்கியதாகும். கடனைப் பெறுபவர்கள் மிக வும் வறியவர்களாக இருப்பதால் அவர்களது நுகர்வு மட்டம் மிகவும் குறைவாக இருக்கும். சிலசமயங்களில் கடன் பெற்றதும் அதில் பெரும் பகுதியை நுகர்வுற்குச் செலவு செய்து விடுவதனால், அதனை முதலீடு செய்யச் தவறிவிடுகின்றனர். இதனால் கடனைத் திருப்பிச் செலுத்த முடியாமல் போகின்றது. இதன் விளைவாக நுண்கடன் செயற்பாடும் தோல்வியில் முடிவடைந்து விடுகின்றது. எனவேதான் சேமிப்பு, கடன், பயிற்சிகள், சந்தை வாய்ப்பு, சந்தைப்படுத்தல் போன்ற செயற்பாடுகளையும் இணைத்து நுண்நிதி செயற்பாடு மேலோங்கியது. குறைந்த பட்சம் சேமிப்பையாவது உள்ளடங்கியதாக நுண்கடன் செயற்பாடு இருத்தல் வேண்டும்.

பல நுண்கடன் திட்டங்கள் ஏழை எளிய மக்களது வாழ்வாத ரத்தை உயர்த்தும் நோக்கில் பல தொண்டு நிறுவனங்களால் செயற்படுத்தப்பட்டுள்ளது. பல வெளிநாட்டு தன்னார்வ நிறுவனங்கள், உள்ளூர் தொண்டு நிறுவனங்களுக்கு நன்கொடையாக விதைப்பணமாக (seed money) மீள்சுழற்சி நிதியாக வழங்கி, உள்;ர் ஏழை மக்களுக்கு முறை சார் நிதிநிறுவனங்களை அணுக முடியாதவர்கள், தொழில் முயற்சி களில் ஈடுபாடு கொண்டவர்களுக்கு கடன் வழங்க உதவி செய்தன.

ஒரு சில உள்;ர் தன்னார்வ நிறுவனங்களின் செயற்பாடுகள் வெற்றி கண்டுள்ள நிலையில், அநேகமான செயற்பாடுகள் தோல்வியில் முடி வடைந்துள்ளன. இதற்குப் பிரதான காரணமாக காணப்படுவது தொண்டு நிறுவனங்களின் முகாமைத்துவத்தில் காணப்படும் பலவீனங்கள் ஆகும். கடன் பெறுபவர்களது எதிர்மறையான எண்ணங்கள், முறையான அல்லது சீர்தூக்கிப் பார்க்காத முதலீட்டுத்திட்டங்களுக்கு கடன்வழங்குதல், முதலீடு செய்தவர்களுக்கு தேவை யான ஆலோசனைகள் வழங்காமை போன்றனவாகும்.

நுண்நிதி வெற்றிகரமாகத் தொடர்ந்து செயற்பட வேண்டுமாயின் முதலாவதாக நிதி பெறுபவர்களது மனப்பாங்கிலே பாரிய மாற்றங்களை ஏற்படுத்துவது அவசியமாகும்.

கடன் வழங்குவதற்குத் தெரிவு செய்யப்பட்டவர்களிடத்திலே இக் கடன் "திருப்பிச் செலுத்தப்படவேண்டியது" என்பதை தெளிவுபடுத்தி, அதனை நாம் திருப்பிச் செலுத்தும் போது மேலதிகமாக ஒரு தொகையை கொடுக்கவேண்டும். நாம் திருப் பிச் செலுத்தினால்தான் அந்த நிதி எம்மைப் போல் நிதி நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் ஏனைய ஏழைகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த உதவும் என்ற நல்ல சிந்தனைகளை வளர்க்கவேண்டும்.

மேலும், அவர்கள் எத்தகைய வருமானம் ஈட்டும் தொழில்களில் முதலீடு செய்யப்போகிறார்கள், அந்த தொழில் ரீதியான அறிவுத் திறன்கள் அவர்களிடத்தில் உள்ளதா? இந்தத் தொழிலில் உள்ள இடர்பாடுகள் பற்றி நன்றாக ஆராய்ந்துள்ளார்களா? என்ற விடயங்கள் பற்றிக் கடன் பெறுபவர்களுடன் கலந்தாலோசிக்க வேண்டும். எந்தவித பொறுப்புகளு மின்றி கடன் வழங்குவது ஆபத் தானது. எனவே, கடன் பெறத் தகுதியுடையவர்களை சிறுகுழுக்களாக ஒழுங்கமைத்து, அந்தக் குழுக்களில் உள்ளவர்கள் ஒருவர் கடன் பெறும் போது, மற்றவர்களைப் பொறுப்பு நிற்க வைத்தும், கடன் பெற்றவர் கடனை ஒழுங்காகத் திருப்பிச் செலுத்தினால் மட்டுமே ஏனையவர்கள் கடனைப் பெறலாம் என்பதையும் உணர்த்த வேண்டும். கடன் பெறுவதற்கான தகுதியாகக் குறித்த திகதியில் குறித்த காலத்திற்கு ஒழுங்காக ஒரு தொகைப் பணத்தைச் சேமிப்புச் செய்யத் தூண்டவேண்டும். சிறு தொகையாக பலபேருக்கு வழங்குவதனால் நிர்வாகச்செலவு சற்று அதிகமாக இருக்கும்.

எனவே, வட்டியும் அதிகமாக அறவிடவேண்டிய நிலை ஏற்படும். ஏனெனில், அதிகளவு கணக்குகளை பேண வேண்டியிருப்பதால் இது தவிர்க்க முடியாதது. உங்கள் கைவசம் உள்ள நிதியை தொடர்ந்தும் பல பேருக்கு வழங்கி வாழ்வளிக்க விரும்பினால், பலவிடயங்கள் பற்றி சிந்தித்துத் தீர்மானம் எடுக்கவேண்டும் முதலாவதாக பயனாளிகளை தெரிவு செய்யவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது மிகப்பெரிய சவாலாகும். பயனாளிகளிடத்தே உழைத்து முன்னேற வேண்டும் என்ற அவா அல்லது ஒரு தொழில் முயற்சியாளனுக்குரிய பண்புகள் இருக்கின்றனவா? என்பதை அறியவேண்டும். வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளவர்களுக்கு நிதி உதவி வழங்க முன்வரும் போது அவர்களிடத்திலே தொழில் முயற்சியாளனுக்குரிய பண்புகளைக் காண்பது கஸ்டமாக இருக்கும். எனவே, நுண்நிதியில் ஒரு பகுதியை பயனாளிகளைப் பயிற்றுவிப்பதற்காக செலவிடலாம். தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளை முதலில் தொழில் முயற்சியாளனாவதற்குரிய பயிற்சி களை வழங்கி, அவர்களைத் தொடர் மதிப்பீடு செய்து திறமை யுள்ளவர்களை இனங்கண்டு நிதி வழங்கலாம்.

அவர்களது தொழில்கள் வெற்றி பெறும் போது, பயனாளர்களுக்கு தொழில் வாய்ப்புகளை வழங்கலாம். அவர்களும் வருமானம் பெற வாய்ப் புண்டு. அத்துடன், தொழிலில் பல விடயங்களைக் கற்று கொள்ளவும் வாய்ப்புண்டு.

அவரகளிடத்தே தொழில் முயற்சியாளர்களுக்கான பண்புகள் மிளிரத் தொடங்கும் போது, அவர்களுக்கும் நிதி வழங்கி புதிய தொழில்களை உருவாக்கலாம். எனவே, நுண்நிதிச் செயற்பாட்டில் நிதி வழங்குவதற்குத் தகுதியானவர் களை தேர்ந்தெடுப்பது அவசியமாகும்.

அடுத்ததாக, பெற்ற கடனைத் திருப்பிச் செலுத்துதல் என்பது நுண் நிதிச் செயற்பாட்டில் கவனிக்க வேண்டிய மற்றோர் விடயமாகும். அத்துடன் எவ்வாறு அறவிடப்பட வேண்டும் என்பதையும் தீர்மானித்தல் வேண்டும். இங்கு கடன் வழங்குபவர் என்ன தொழில் முயற்சிக்கு கடன் பெறுகின்றார், அதிலிருந்து அவர் பெற்று கொள்ளவிருக்கும் வருமானம் என்பவற்றை அடிப்படையாக வைத்து கடனை மீளத் திருப்பிச் செலுத்தும் முறையை வடிவமைத்தல் வேண்டும். எல்லாக் கடனாளிக்கும் மாதந்தம் செலுத்துதல் என்பது பொருத்தாது.

வருமான பாய்ச்சலுக்கு ஏற்ப திருப்பிச் செலுத்தும் வழிமுறை அமைதல் வேண்டும். அத்துடன் வட்டியும், முதலும் சேர்த்து சமமான தொகையை திருப்பிச் செலுத்தும் வகையில் தவணைக் கட்டணம் தீர்மானிக்கபடல் வேண்டும். சில முயற்சிகளில் நாளந்தம் வருமானம் வருமெனினும், ஒவ்வொரு நாளும் கட-னைத் திருப்பச் செலுத்தக் கூடிய வகையில் ஏற்பாடுகள் செய்வது அவசியம். நாளாந்தம் வருமானம் பெறுபவர்களுக்கு மாதம் ஒரு முறை கடனைத் திருப்பிச் செலுத்தும் ஏற்பாடு பொருத்தமானதல்ல.

தொழில் முயற்சிகளுக்கு நிதி வழங்கிய பின்னர் இடையிடையே அவர்களுக்கு தேவையான ஆலோசனைகளை வழங்கி ஊக்கப் படுத்துவதும் அவசியமானது. தனிப்பட்ட முறையிலோ, அல்லது நிதிபெற்ற அனைவரையுமோ அழைத்துக் கலந்துரையாடி, ஆலோசனைகளை வழங்கி ஊக்க-படுத்துவதும் அவசியம். இத்தகைய செயற்பாடுகள் நுண்நிதியின் வெற்றிக் கும் தொழில் முயற்சியாளார்கள் தடைகளை நீக்கி முன்னேறுவதற்கும் உதவும்.

ஒவ்வொருவரிடத்திலும் தொழில் முயற்சியாளனுக்குரிய அனைத்து தகுதிகளையும் காணமுடியாது. ஆனாலும், ஒவ்வொருவரிடத்திலும் ஏதோ ஒரு தகுதி மேலோங்கி காணப்படலாம். எனவே, அந்தத் தகுதிகளை இனங்கண்டு அவர்களை கூட்டாகத் தொழில் செய்வதற்கு ஊக்குவிக்கலாம். எல்லோரையும் சம பங்காளிகளாக்கித் தொழில் முயற்சியில் கூட்டுப் பொறுப்பாளி களாக்கி, தொழில் முயற்சிகளை நடைமுறைப்படுத்தலாம். இதனை உரிய முறையில் செயற்படுத்தினால் அந்தச் சமூகத்தில் சமூகசார் முதலீட்டையும் கட்டியெழுப்ப முடியும்.

நுண்நிதி செயற்பாட்டிற்கு ஏழைப் பயனாளிகளைத் தெரிவு செய்தால், மேற்கூறிய வழிமுறையிலேயே செயற்படுத்துவது வெற்றியை தரும். இதைவிடுத்து உங்கள் நோக்கம் உள்ளூர் பொருளாதாரத்தை மேம்படுத் துதல், தொழில் வாய்ப்புகளை வழங்கல் என்பதாக இருந்தால், நீங்கள் புதிய நடுத்தர தொழில் முயற்சிகளை ஆரம்பிக்க இருக்கின்ற தொழில் முயற்சியாளர்கள் அல்லது தற்போது செயற்பட்டு கொண்டிருக் கின்ற தொழில் முயற்சிகளின் விரிவாக்கத்திற்கு நிதி வழங்கலாம்.

ஒரு நிபந்தனையாக தொழில் வாய்ப்புகள் தகுதியான வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளவர்களுக்கு வழங்கபட வேண்டும் என்ற அடிப்படையில் நிதி வழங்கலாம். புதிய தொழில் முயற்சிகளுக்கு நிதி வழங்க முன்வரும் போது அவர்களது முன்மொழிவுகளைப் பெற்று அவற்றை சீர்தூக்கிப்பார்த்து, அவை வெற்றி யளிக்கும் என்பதை உறுதி செய்த பின்னரே நிதி வழங்க வேண்டும். புதிய தொழில் தொடங்குபவர் களுக்கு நிதி வழங்கினால் நிதி முகாமைத்துவம் மிக எளிமையானதாக இருக்கும். இவர்களிடத்தில் கடனுக் காக பொறுப்புகளை பெற்று கொள்ளலாம். முறைசார் நிறுவனங் களைவிட உங்களது நுண்நிதியை நோக்கி முயற்சியாளர்கள் கவரப்படுவ-தற்கு ஏற்ற வகையில் சலுகை அடிப் படையில், குறைந்த வட்டி வீதத்தில் நிதியை வழங்க முன்வர வேண்டும்.

நீங்கள் வழங்குகின்ற சலுகை அடிப்படையிலான கடனுக்காகவே நிபந்தனைகளை முன்மொழிந்து வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ள ஏழைக் குடும்பங்களுக்கான தொழில் வாய்ப்பை உறுதி செய்வீரகள்.

எனவே, தொழில் முயற்சி உருவாக்கம் உற்பத்தி பொருட்களின் பெருக்கம் என்பவற்றுடன், வேலை வாய்ப்பும் வறுமை ஒழிப்பும் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. இவ்வாறன நிதிவழங்களில் தொழில் முயற்சி தொடர்பான சகல விடயங்களும் முழுமையாக ஆராய்ந்து திருப்திப்படும் பட்சத்தி லேயே நிதியை வழங்க வேண்டும்.

அதே சமயம் அவர்களுக்கு தொழிலாளர்களை வறிய குடும்பங் களிலிருந்து தெரிவு செய்து, தொழில் தேவையான திறன்களை உள்ளடக் கிய பயிற்சிகளை வழங்கி, தொழில் முயற்சிக்கு தொழிலாளர் தங்கு தடை யின்றிப் பங்களிப்பு செய்து தொழில் வெற்றியை உறுதிப்படுத்த முடியும். தற்போது செயற்பட்டு கொண்டிருக் கின்ற தொழில் முயற்சிகளின் விரி வாக்கத்திலும் இதே போன்ற செயற்பாடுகளை பின்பற்ற முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கும் வழங்குகின்ற நிதிக்கு எதிராக பொறுப்புகளை பெற்று கொள்ள முடியும். விரிவாக்கம் தொடர்பான முன்மொழிவுகளை முயற்சியாளரிடமிருந்து பெற்று முழுமையாக ஆராய வேண்டும். தொழில் விரிவாக்கம் வெற்றிகரமாக இலாபம் உழைக்கக் கூடியதாக இருக்குமெனின் நிதிவழங்கலாம். அதேபோல், வேலை வாய்பையும் உறுதிபடுத்தல் வேண்டும்.

உங்களது நிதிவழங்கல் செயற்பாடுகள் இலங்கையின் நிதி சட்ட வரைபுகளுக்கு உட்பட்டதாக, சட்ட ரீதியாக, முழுமையாக பாதுகாக்கப்பட்டதா என்பதையும் உறுதி செய்ய வேண்டும். அப்போது தான் கடன் கொடுத்தவர்களிடமிருந்து பெற்றுக் கொண்ட பொறுப்புகளைச் சட்டரீதியாக மீளப்பெற வாய்ப்புள்ளது. அதாவது கடன் பெற்றவர்கள் கடனை மீளளிக்கத்தவறும் பட்சத்தில் சட்டரீதியான நடவடிக்கை மேற்கொண்டு எமது அருமையான நிதி வளத்தை பெற்று கொள்ள முடியும்.

நுண்நிதி செயற்பாடுகளில் நிர்வாகச் செலவுகளைக் கட்டு படுத்தி வினைத்திறனுடன் செயலாற்ற வேண்டிய தேவையும் உள்ளது. ஓரளவு தொண்டு மனப்பாங்குடன் இருப்பவர்கள் அல்லது வேறு தொழில்களில் இருந்து கொண்டு பகுதி நேரமாக சேவை வழங்கக் கூடியவர்களை நிதியின் முகாமைத் துவச் செயற்பாட்டிற்குள் ஈடுபடுத்துவது நிர்வாகச் செலவைக் குறைப்பதற்கான வழிவகையாகும்.

மேலே குறிப்பிட்ட விடயங்களை நுண்நிதி நிர்வாகம் கவனத்திற் கொள்ள வேண்டிய பொதுவான விடயங்கள் ஆகும். இவற்றை விட சூழ்நிலைகளுக்கேற்ப கவனத்தில் கொள்ள வேண்டிய சில விடயங்களும் உள்ளன. கடன் வழங்கும் செயற்பாடு வருமானத்தை தருவதற்கு ஏற்படும் காலம், முயற்சிக்கு முயற்சி வேறுபடும். தோட்டப்பயிர் செய்கைக்கும், பழச்செய்கைக்கும் கால்நடை வளர்ப்பிற்கும் வேறுபாடுகள் உள்ளன.

இதன் அடிப்படையில் கடனை திரும்பப் பெறும் காலம் ( Grace period) கடனுக்குக் கடன் வேறுபடும். Grace period இல் முழுக்கடனுக்குமான வட்டியை முதலுடன் சேர்த்து தவணைக் கட்டணத்தை தீர்மானிக்கலாம். சிறு வியாபாரம் போன்ற வற்றிற்கு Grace period தேவையில்லை. இவையெல்லாம் நிதி நிர்வாகம் செய்பவர்கள் தேவைக்கேற்ப தீர்மானிக்க வேண்டியுள்ளது.

எந்தவொரு சமூக பொருளாதார அபிவிருத்தி நிகழ்சிகளை எடுத்துக் கொண்டாலும், உடனடிப் பெறுபேறுகளை வெளிப்படுத்த சில காலம் எடுக்கும். போரால் பாதிக்கபட்ட மற்றும் பாதிப்புக்குள்ளான மக்களின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்பும் முனைப்புடன் செயற்படுவோமாக.

# வறுமையற்ற வாழ்வு

இவ்வுலகிலே எல்லோரும் இன்புற்று வாழ்வதற்கான எல்லாச் செல்வங்களும் அமைந்திருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு எல்லோருக்கும் அமைவதில்லை. இரப்பேபார், ஈவோர் என்ற பாகுபாடு மறைய வேண்டும். கொடுப்பது உலகில் உயர்ந்த செயல். கொடுப்போரும் கொள்வோருமற்ற சமுதாய அமைப்புத்தான் உன்னதமானது.

இத்தகைய சமுதாய அமைப்புள்ள உலகில் தான் மக்களும் இன்புற்று வாழ்வார்கள். அது எப்போது மிளிரும் என்றால் வறுமையால் வாடும் இரப்போர்க்கு இல்லையென்னாது தக்க நேரத்தில் தகுந்தவைக்காக தகுதியானவர்கள் ஈவதுதான்.

"வறுமையால் வாடுகிறேன் எனக்கு ஏதேனும் கொடுங்கள் என்று இருப்பதை" விடுத்து, வறுமையால் வாடுகிறேன் வலிமை உள்ளவரை பாடுபடுவேன் எனக்கு உதவிடுங்கள் என்பது உயர்ந்த குணம்.

வறுமையற்ற வாழ்விலே மக்கள் அனைவரும் வாழவேண்டும். கொள்வோரும் கொடுப்போருமற்ற ஒரு சமுதாய வாழ்வு இவ்வுலகிலே தோன்ற வேண்டும். உடையார் என்ற பேதமற்ற சமுதாயமாக தமிழ் மக்கள் வாழவேண்டும். இதற்கு "நம்பிக்கை ஒளி" தனது கதிர்களை எத்திசையும் பரப்பிடல் வேண்டும் என்பது காலத்தின் தேவையாகவுள்ளது.

உலகிலே எல்லோராலும் எக்காரியங்களையும் இயற்ற முடியாது. பொதுவாக நல்ல செயல்களைச் செய்ய எல்லோராலும் முடியாது. அருஞ்செயல்கள் ஆற்றுவோர் ஒருசிலரே. உயர்ந்த உள்ளமும், நுட்ப அறிவும், சிறந்த ஆற்றலும் உள்ளவர்கள் தான் உயர்நத செயல்களை உறுதியுடன் செய்து முடிப்பார்கள்.

அந்த வகையில் புலம்பெயர் வாழ் தமிழ்களால் ஒன்றிணைக்கப்பட்ட "நம்பிக்கை ஒளி" தன் பணியினை பரப்பி தன் ஒளிக்கதிர்களை தமிழ்வாழ் தாயகத்தில் வறுமையற்ற வாழ்வு செழிப்புற பணிபுரிந்திட புலம்பெயர்வாழ் நல் உள்ளங்கள் அனைவரும் கைகோர்த்தால் அதனை மிக எளிதில் சாதித்துவிட முடியும்.

ஒன்றை உருவாக்குவது மிக மிக கடினம். அவ்வாறு உருவாக்கியதை உடைத்தெறிவது மிகமிக சுலபம். "ஒற்றுமையே பலம்" என்பார்கள் எத்தனை கைகள் இணைகின்றதோ அத்தனைக் கும் பலம் மிகுதியாக இருக்கும். நலன் கருதிப் பணி செய்வதை விடுத்து உள்ளத்திலே சுயநலமின்றி வட கிழக்கு வாழ் தமிழர் வறுமையற்ற வாழ்வு வாழ வழிகாட்டுங்கள்.

மழையினால் உலகம் நன்மையடைகின்றது. மழை மனிதரிடமிருந்து எவ்வித நன்மையும் அடைவதில்லை.

புலம்பெயர் தமிழர்கள் வாரி வழங்கும் நன்கொடைகளைப் பற்றி பாடுவதற்கு புலவர்களுக்கு வார்த் தைகள் இல்லை... கொடை, அறம், பிறர்க்கு உதவுதல் பண்டைத் தமி ழர்கள் கடமை. அவர்களைப் பின்பற்றி மரபுவழியாக வரும் தமிழர் நாம் எமது கடமையை மறக்கலாமா? இணைவோம் நாமும் இன்பமுடன் கைகோர்த்து நம்பிக்கை ஒளியைப் பரப்பி ஏழைத் தமிழர் வாழ் மனங்களை வெல்வோம். மாற்றத்தை ஏற்படுத்துவோம்.. வறுமையற்ற வாழ்வு எங்கும் பிரகாசிக்க இணைந்திடுவோம்.

**திருமதி செறின்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊரிழந்து... உறவிழந்து... வேரறுந்து ... வாழும் எமது தாயக உறவுகளுக்கு உதவிக்கரம் நீட்டும் "நம்பிக்கை ஒளி"யின் மகத்தான சேவையில் மாதாந்தம் £ 2 (பவுண்ஸ்களை) செலுத்தி தாங்களும் இணைந்து கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**Account Name :- Ray of Hope People,**
**Account Number :- 43641341**
**Sort Code 20-92-60.**
**Bank Name - Barclays.**

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள் : 02086179343

போராலும், இயற்கை அனர்த்தத்தாலும்,
அடக்கு முறைகளாலும் அன்றாடம் துன்பப்பட்டு
வாடும் எம் இனிய உறவுகளின் வாழ்வு மிளிர
அவர்களின் வாழ்வில் நம்பிகை ஒளியேற்ற
தம்மாலான பணியினை சிறப்பாக மேற்கொண்டு
வருகின்றது "நம்பிக்கை ஒளி" நிறுவனம்
நீங்களும் இதனுடன் கைகோருங்கள்...
எம் உறவுகளுக்கு ஒளியேற்ற வாருங்கள்...



## நம்பிக்கை ஒளி
## Ray of Hope

உங்கள் வாசல் தேடிவர
ஒரு வருடத்துக்கு £12 மட்டுமே

**Subscription Form**

Name : ..........................................
Address : ..........................................
..........................................
Post Code : ..........................................
Telephone: ..........................................

மேலே உள்ள விண்ணப்பப் படிவத்துடன் £12 க்கு "Ray of Hope People" என்ற பெயரில் காசோலையை
GO 5, Courtenay House, 10 Courtenay Road, East Lane, Business Park, Middlesex, wembley, HA9 7ND, UK
என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.



FACEBOOK.COM/THEROH.ORG - WWW.THEROH.ORG - EMAIL: ROH@THEROH.ORG TEL:(0044)2086179343 -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org